வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk மலர் : 03 07.05.2022 சனிக்கிழமை இதழ் : 152 பக்கங்கள் : 16





படங்கள் : ஐ.சிவசாந்தன்

# நாடு நேற்று முற்றாக முடங்கியது! வடக்கு, கிழக்கும் பூரண ஆதரவு!!

யாழ்ப்பாணம், மே 07

ஒன்றிணைந்த தொழில்சங்கங்களின் அழைப்பின்பேரில் நேற்று வெள்ளிக்கிழமை நாடு முழுவதும் கடையடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்தப் போராட்டத்துக்கு வழமையைவிட வடக்கு, கிழக்கு மாகாணங்களும் முழுமையாக ஆதரவளித்தன.

நாட்டில் நிலவும் நெருக்கடிகளுக்கு உடனடியாக தீர்வு காணப்பட வேண்டும், அரசாங்கம், ஜனாதிபதி ஆகியோர் பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி நேற்றைய தினம் ஹரத்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

சுகாதாரம், கல்வி, போக்குவரத்து நிர்வாக சேவை, பொதுச் சேவை உள்ளிட்ட 2ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழில் சங்கங்கள் மற்றும் வர்த்தகர்

15

# பல்கலை மாணவர் ஒன்றியத்தின் போராட்டம் தற்காலிக நிறுத்தம்!

கொழும்பு, மே. 07

பாராளுமன்ற வளாகத்தில் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட தொடர் ஆர்ப்பாட்டம் நேற்று தற்காலிகமாக இடைநிறுத்தப்பட் டுள்ளது.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டப் பேரணியை ஆரம்பித்த மாணவர்கள், பாராளுமன்றத்தின் நுழைவுப் பகுதியான பொல்துவ சந்தியில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து அவர்கள் மீது பொலிஸா ரினால் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்

15

# மருந்துகளுக்கு பெரும் பற்றாக்குறை; சத்திர சிகிச்சையை நிறுத்தும் நிலை!

## யாழ். போதனா மருத்துவமனை அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 07

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அத்தியாவசிய மருந்துகளுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அத்துடன், சத்திரசிகிச்சைகளையும் நிறுத்தும் நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த மருத்துவமனையின் பிரதி பணிப்பாளர் மருத்துவர் சி. யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில்,

"யாழ். போதனா

15

# அவசரகாலச் சட்டம் நள்ளிரவு முதல் அமுல்!



கொழும்பு, மே 07

**நேற்று வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும்வகையில் அவசரகால சட்டத்தை ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.**

பொது பாதுகாப்பு, பொது ஒழுங்கை பேணுதல் மற்றும் சமூகத்தின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான விநியோகங்கள் மற்றும் சேவைகளை பேணுதல் ஆகியவற்றை கருத்தில் கொண்டு ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

15

# பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து ரஞ்சித் மீண்டும் இராஜினாமா

கொழும்பு, மே 07

பிரதி சபாநாயகராக நேற்று தெரிவு செய்யப்பட்ட ரஞ்சிதிலிசியம்பலாப்பிட்டிய, மீண்டும் குறித்த பதவியிலிருந்து விலகுவதற்குத் தீர்மானித்துள்ளார்.

15

# இடைக்கால அரசில் பங்கேற்பது குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பரிசீலிக்கும்

## அதற்கு முன் ஜனாதிபதி பதவி விலகவேண்டும்

கொழும்பு, மே. 07

"பிரதமரும் ஜனாதிபதியும் பதவி விலகி இடைக்கால அரசு ஒன்று அமைக்கப்படுமானால் அதில் பங்கேற்பது குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பரிசீலிக்கும்."

-இவ்வாறு

15

# பொலிஸார்-பொதுமக்கள் அக்கரைப்பற்றில் மோதல்!

பொலிஸார் 11 பேர் உட்பட 16 பேர் வைத்தியசாலையில்

11

# பாராளுமன்றம் அருகே போராட்டம் கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை பிரயோகம்!



கொழும்பு, மே 06

பாராளுமன்ற நுழைவு வீதிப் பகுதியில் போராடிய பல்கலைக்கழக மாணவர்களை நேற்று பொலிஸார் கண்ணீர் புகை குண்டு வீசியும், தண்ணீர் வீச்சு தாக்குதல்

15

# பாராளுமன்றில் நேற்று அல்லோலகல்லோலம்!

- சபாநாயகர் அறையில் எதிரணி குழப்பம்
- செங்கோலை கைப்பற்றுவதற்கும் முயற்சி
- பாராளுமன்றமும் ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, மே 06

**நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுக்குமாறு கோரி எதிரணியினர் வற்புறுத்தலால் நேற்று பாராளுமன்றம் அல்லோல கல்லோலமானது.**

இந்த அமளிக்கு மத்தியில் செங்கோலைக் கைப்பற்றுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியினர் முயற்சித்தனர். இதனாலும் சபையில் நேற்று பதற்ற நிலை அதிகரித்தது.

நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றம் கூடியபோது, நிலையியல் கட்டளை சட்டத்தை

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதியையும் பிரதமரையும் பதவியிலிருந்து விலகுமாறு கோரி தொடர் போராட்டங்கள் நடக்கின்றன. அவரைத் தெரிவு செய்த அறுபத்தி ஒன்பது லட்சம் மக்களும் அவரை இப்போது வேண்டாம் என்று போராட்டம் நடாத்துவதுபோல ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியவர்கள், எல்லோரையும் அதனை நம்பவைத்துவிட்டார்கள்.

காலிமுகத்திடலில் நடக்கும் போராட்டமாக இருக்கட்டும், அல்லது ஆங்காகங்கே நடக்கும் போராட்டங்களாக இருக்கட்டும், இவை எல்லாம் எப்படி நடக்கின்றன, யாரால் தூண்டி விடப்படுகின்றார்கள் என்பது தெரிந்தவர்களுக்குத்தான் தெரியும்.

அதற்காக இந்த அரசு வீட்டுக்குப் போகவேண்டிய அரசு இல்லை என்று இந்த ஊர்க்குருவி வாதாடுவாதாக யாரும் வரிந்து கட்டிக்கொண்டு வந்துவிடவேண்டாம்.

இவர்கள் வீட்டுக்குப் போகவேண்டியவர்கள் தான்.

அது சரி, வரவேண்டியவர்கள் யார்? அவர்கள் இந்த நாட்டை தூக்கி நிமிர்த்தக்கூடியவர்களா? அல்லது அதற்கான குறைந்தபட்ச திட்டம் ஏதாவதாவது அவர்களிடம் இருக்கின்றதா என்றால் அதற்கு பதில், இல்லை என்பதே.

யுத்தம் முடிந்த பின்னர், பாதுகாப்புச் செலவை குறைக்க முடியவில்லை. மூன்று லட்சத்திற்கும் மேற்பட்ட படையினரை கட்டி வளர்க்கவே பட்ஜெட்டில் அதிக நிதி ஒதுக்கவேண்டிய நிலை.

யுத்தம் முடிந்த பின்னர் வடக்கு மாகாணத்திற்கு படையெடுத்த லீசிங் கொம்பனிகள், கவர்ச்சிகரமான அறிவிப்புக்களுடன் வடக்கில் வந்து குவிந்தன. அந்த கவர்ச்சிகரமான விளம்பரங்களால் உந்தப்பட்ட நம்மவர்கள் தமது சக்திக்கு மீறிக் கடன்பட்டு பொருட்களை வாங்கினர். பின்னர் அது வட்டிக்கு வட்டி என்று வந்து தலையை முட்டியபோது, தாலிகளை விற்று அதிலிருந்து மீண்டவர்களும் உண்டு.

அதேபோலவே, நாடும் கடன்களை செலத்த கடன் பட்டு, கடன் பட்டு இன்று நாட்டையே விற்கவேண்டிய நிலை.

சர்வதேச நாயணய நிதியத்திடம் போய் நாட்டை அடவு வையுங்கள் என்று ஐ. தே. க. தலைவரும் மற்றும் சிலரும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தபோதிலும் அதனை கண்டு கொள்ளாத அசாங்கம், காலம் தாழ்த்தி அங்கே சரணடைந்திருக்கின்றது. அவர்களின் உதவி கிடைத்தாலும் நாடு இன்றிருக்கும் நெருக்கடி நிலையிலிருந்து மீள இன்னும் இரண்டு வருடங்களாவது தேவை என்று நிதி அமைச்சரே கூறிவிட்டார்.

வரிகள் அதிகரிக்கப்படப்போகின்றன. அரச சேவைக்கு ஆட்கள் எடுப்பது சில வருடங்களுக்கு நிறுத்தி வைக்கப்படப் போகின்றது. இப்படி நாடு பலவற்றை சந்திக்க விருக்கின்றது. ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் பல ஆயிரம் பட்டதாரிகள் இனி வேலை கேட்டு வீதிகளில் போராடப் போகின்றார்கள். இப்படி பல காட்சிகளை காணத் தான் போகின்றோம். இது எதிர்காலத்தை நம் கண்முன் காட்டிக் கொண்டிருக்கின்றது.

இதேவேளை, இந்த நெருக்கடியை ஒவ்வொருவரும் தத்தமக்கு எப்படி சாதகமாக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், நமது தலைவர்கள் என்று சொல்லப்படுகின்றவர்கள் மாத்திரம், எப்படி தத்தமக்கு தேவையானவற்றை செய்துகொள்ளலாம் என்றே யோசித்துக்கொண்டிருக்கின்றனர்.

ஆனால் நமது அண்டை நாடான இந்தியாவோ, இலங்கைக்கு உதவ பல்வேறு வழிகளிலும் முன்னிற்கின்றது. இந்த ஒவ்வோர் உதவியின் போதும் தனக்கு தேவையானவற்றை எப்படி எப்படி யெல்லலாம் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதிலேயே அவர்களின் கவனம் முழுவதும் இருக்கின்றது.

அண்மையில் வடக்கு வந்திருந்த இந்திய ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலை, யாழ்ப் பாணம் சிறைக்கு சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழக மீனவர்களை சந்தித்தார்.

எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றத்திற்காக சிறையில் இருக்கும் மீனவர்கள் அவர்கள். அவர்களை சிறையில் பார்த்த பின்னர், சிறையிலிருந்தவாறே அவர் செய்தது, புதுடில்லியிலுள்ள தனது கட்சியின் தேசியத் தலைவர் நாட்டாவிடம் தெலைபேசியில் பேசியதுதான். அவருடன் பேசிய அவர், கச்சதீவை 99 வருடங்களுக்கு இலங்கையிடமிருந்து குத்தகைக்கு பெறவேண்டும் என்ற யோசனையை முன்வைத்திருக்கிறார்.

இந்திரா காந்தி காலத்தில் இலங்கைக்கு வழங்கப்பட்ட கச்சதீவை இந்தியா மீண்டும் பெறவேண்டும் என்ற கோரிக்கையை தமிழக திராவிடக் கட்சிகள் பல தசாப்தங்களாக கோரிவருகின்ற நிலையில், ஒரு தலைவராக இன்றைய இலங்கை நெருக்கடியைப் பயன்படுத்தி, கச்சதீவை பணம் செலுத்தி குத்தகைக்கு பெறவேண்டும் என்ற யோசனையை அண்ணாமலை முன்வைத்திருப்பதை பார்க்கின்றபோது, அவரது தலைமை தமிழகத்திற்கு எத்தகைய மாற்றத்தை கொண்டுவரப்போகின்றது என்பதை உணர முடிகின்றது.

இலங்கை தனது நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக, அரச நிறுவனங்களை விற்பனை செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில், கச்சதீவை குத்தகைக்கு எடுக்க நினைக்கும் இந்தியாவின் முயற்சி வெற்றியளிக்கலாம்.

கச்சதீவை குத்தகைக்கு கொடுத்தால் அதனால் நாம் எப்படி பாதிக்கப்படுவோம் என்பதை மற்றுமொரு பத்தியில் பார்ப்போம். ஆனால், இலங்கையின் நெருக்கடியை தமக்கு சாதமாக எப்படி மாற்றலாம் என்று அண்ணாமலை சிந்தித்ததுபோல சிந்திக்கக்கூடிய தலைமை எமக்கு எப்போது கிடைக்கும் என்ற கவலையே இப்போது நமக்கு!

**- ஊர்க்குருவி**

# ஜனாதிபதி, பிரதமர் உடனடியாக பதவி விலகியே ஆகவேண்டும்!

## லக்ஷ்மன் கிரியெல்ல வலியுறுத்து



**கொழும்பு, மே 07**

**ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாகப் பதவி விலகுவதைத் தவிர வேறு வழியில்லை என்று எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையை இதுவரை ஆண்ட எந்தவொரு அரசும் வங்குரோத்து நிலைக்கு நாட்டைக் கொண்டு செல்லவில்லை. எனினும், இந்த அரசு நாட்டை வங்குரோத்து அடைய வைத்துள்ளது.

நாட்டை வங்குரோத்து அடைய வைத்த ஆட்சியாளர்களுக்கு என்ன தண்டனை என நீதி அமைச்சரிடம் கேட்க விரும்புகின்றேன்.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரால் இன்று வெளியில் தலைகாட்ட முடியவில்லை. பாராளுமன்றத்துக்கு முன்பாகவும் கிராமம் ஒன்று உருவாகியுள்ளது. எம்மையும், எமது உறவினர்கள் திட்ட ஆரம்பித்துள்ளனர். பாராளுமன்றத்தில் கதைக்கின்றீர்கள், என்னதான் தீர்வு என அவர்கள் கேட்கின்றனர். இதற்கு என்ன பதிலை வழங்குவது?

சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கினால், அப்பணத்தைக் கொள்ளையடிக்க முடியாது என்பதால்தான் ஆட்சியாளர்கள் ஐ.எம்.எப்பை அன்று நாடவில்லை. தற்போது தலைக்கு மேல் வெள்ளம் வந்துள்ள நிலையில்தான் அங்கு சென்றுள்ளனர்-என்றார். (அ)

## இராஜாங்க அமைச்சர் குணபால ராஜினாமா!

கொழும்பு, மே. 07

கூட்டுறவு சேவைகள், சந்தைப் படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் குணபாலரத்ன சேகர தனது ராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் இதனை கூறினார்.

எனினும், ஜனாதிபதி ராஜினாமாவை ஏற்றுக் கொள்ள வில்லை என அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## கட்டுத்துவக்கு வெடித்து குடும்பஸ்தர் படுகாயம்!

வடமராட்சி, மே 07

பாலைப்பழம் பிடுங்குவதற்காக சென்றவர் கொண்டு சென்ற கட்டுத்துவக்கு வெடித்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் வடமராட்சி கிழக்கு - பூனைத்தொடுவாய் - போக்கறுப்பு பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் இடம்பெற்றது. இதில், ஜோன்ஸ்ரன் மைக்கல் வலன்ஸ்ரைன் (வயது 38) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்த நபர் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (ஐ-2)



## சுகாதாரத்துறையினர் நேற்று வவுனியாவில் ஆர்ப்பாட்டம்!

வவுனியா, மே 07

அரசாங்கத்திற்கு எதிராக இலங்கை ஜனரஜ சுகாதார சேவைகள் தொழிற்சங்கங்கத்தால் வவுனியாவில் ஆர்பாட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வவுனியா வைத்தியசாலை வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள், அங்கிருந்து பேரணியாக சென்று வைத்தியசாலை சுற்று வட்டத்தினூடாக மன்னார் வீதியை அடைந்து மீண்டும் வைத்தியசாலையை அடைந்தனர்.

இதன்போது அரசாங்கத்தில் இருந்து வெளியேறு, மருந்துகள் இல்லாமல் சுகாதாரக் கட்டமைப்பு சீர்குலைகின்றது, கூடிவிட்டது விலைவாசி ஆதிவாசி ஆகிவிட்டோம், பொருட்களின் விலையை குறைக்க வேண்டும், எரிபொருளின் விலையேற்றத்தை குறை போன்ற பதாதைகளை ஏந்தியிருந்ததோடு அரசாங்கத்துக்கு எதிரான கோசங்களையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர். (அ)

# போராட்டங்கள் தொடர்வதனால் பாராளுமன்ற அமர்வு ஒத்திவைப்பு

கொழும்பு, மே 07

பாராளுமன்ற கூட்டத் தொடர் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றில் ஏற்பட்ட அமளி காரணமாக 10 நிமிடங்களுக்கும் அதிக காலம் நேற்றைய சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.

பாராளுமன்றத்துக்கு பிரவேசிக்கும் வீதியை மறித்து அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தது.

மாணவர்கள் பொலிஸாரின் வீதித்தடையினை மீறி பாராளுமன்ற வளாகத்துக்குள் உட்செல்ல முற்பட்ட போது, அவர்கள் மீது பொலிஸாரால் நீர்த்தரை மற்றும் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பில் எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றைய சபை அமர்வில் சுட்டிக்காட்டியுடதுடன், உடனடியாக சபாநாயகரை சபை அமர்வுக்கு அழைக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

அத்துடன், நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் விவாதிப்பதற்கான காலத்தையும் உடனடியாக பெற்றுத்தருமாறு அவர்கள் கோரியிருந்தனர்.

இதனால் பாராளுமன்றில் அமைதியின்மை ஏற்பட்டிருந்த நிலையில், சபை நடவடிக்கைகளை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக சபைக்கு தலைமைத் தாங்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஹேஸா விதானகே அறிவித்தார்.

இதனையடுத்து சபை நடவடிக்கை மீண்டும் ஆரம்பமானபோது, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பங்கேற்றதுடன், எதிர்வரும் 17 ஆம் திகதி வரையில் ஒத்திவைக்கப்படுவதாக அறிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu
07.05.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 24

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 730 1370**

# இடைக்கால அரசாங்கத்தில் பங்குபற்றலாமா?

இடைக்கால அரசாங்கம் தொடர்பில் பேசப்பட்டு வருகின்றது. ஆனால், இன்றுவரையில், அதற்கான முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. இவ்வாறான தொரு சூழலில், எதிரணியின் தலைமையில், ஓர் இடைக்கால அரசாங்கம் உருவாக்கப்படுமாக இருந்தால், அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றலாமா - என்னும் கேள்வி முன்வைக்கப்படுகின்றது. முதலில் அவ்வாறானதோர் அழைப்பு இதுவரையில் விடுக்கப்படவில்லை. சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பிரதி சபாநாயகர் தெரிவின்போது, நேற்று வரையில் ராஜபக்ஷ முகாமுக்கு எதிராக பேசிவந்த சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்திருந்தனர்.

ராஜபக்ஷக்கள் தொடர்பில் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டு வந்த, மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறீ லங்கா சுதந்திரக் கட்சியும் இதில் அடக்கம். இவ்வாறானதொரு நிலையில், இடைக்கால அரசாங்கம் என்பது ஆளும் பொதுஜன பெரமுனவுக்குள், பதவிகளை பங்கு போடும் ஒரு ‘டீல்’ஆகவே நிறைவுபெறும். இப்படியானதோர் இடைக்கால அரசாங்கத்துக்கு தமிழர்கள் தேவைப்பட மாட்டார்கள். மேலும், அப்படியான தோர் இடைக்கால அரசாங்கத்தில் தமிழர்களும் பங்குகொள்ளவும் முடியாது.

அவ்வாறாயின் எதிரணியினரின் - அதாவது, சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிரணியினரின் தலைமையில் ஓர் இடைக்கால அரசாங்கம் உருவாக்கப்படுமாக இருந்தால், அதில் கூட்டமைப்பு பங்குகொள்ள முடியுமா? இங்குமுள்ள சிக்கலான விடயம் - அப்படியானதோர் அரசாங்கத்தில் கூட்டமைப்பின் பங்குபற்றல் தொடர்பில் கொள்கை சார்ந்து, அவர்கள் மத்தியில் எந்தவொரு நிலைப்பாடும் இதுவரையில் எடுக்கப்படவில்லை. சில ஊகங்களின் அடிப்படையில்தான் இவ்வாறான உரையாடல்கள், எட்டிப் பார்க்கின்றன.

கூட்டமைப்புக்கும் ஏனைய அரசியல் கட்சிகளுக்கும் இடையில், அடிப்படையான வேறுபாடுண்டு. அதாவது, கூட்டமைப்பின் அரசியல் நிலைப்பாடு தொடர்பில் கணிசமான விட்டுக் கொடுப்புக்களை எந்தவொரு கட்சி வெளிப்படுத்துகின்றதோ, அவ்வாறானதொரு கட்சிக்குத்தான், கூட்டமைப்பு நிபந்தனைகளுடன் கூடி ஆதரவை வெளிப்படுத்த முடியும். இவ்வாறான தொரு புரிதலின் அடிப்படையில்தான், ரணில் - மைத்திரி அரசாங்கத்துடன் கூட்டமைப்பு சில விடயங்களில் இணங்கிச் செயல்பட்டிருந்தது. ஆனால் அதனால், எதிர்பார்த்த எந்தவொரு நன்மையையும் தமிழ் மக்கள் பெறவில்லை. கூட்டமைப்பினரைப் பொறுத்தவரையில் இது ஒரு நல்ல அனுபவம்.

எதிர்கட்சிகள் மத்தியிலும், தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் ஆழமான புரிதல்கள் இல்லை. குறிப்பாக சஜித் பிரேமதாஸ தெளிவான நிலைப்பாடுகள் எதனையும் இதுவரையில் வெளியிடவில்லை. ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிரான சிங்கள அதிருப்தியை, தனது அரசியல் இலக்குக்குப் பயன்படுத்தும் உபாயங்கள் தொடர்பில் சிந்திக்கும் ஒரு சாதாரண அரசியல்வாதியென்னும் நிலையை தாண்டி, சஜித் இன்னும் பயணிக்கவில்லை. அவரால் பயணிக்க முடியுமா என்னும் கேள்வியுமுண்டு. இவ்வாறானதொரு சூழலில், வெறும் வார்த்தை ஜாலங்களை நம்பி, கூட்டமைப்பு வரலாற்று முடிவுகளை மேற்கொள்ள முடியாது. அவ்வாறு செய்தால், ஏற்கனவே தேர்தல் அரசியலில் மோசமான பின்னடைவுகளை சந்தித்திருக்கும் கூட்டமைப்பு மேலும் பின்னடைவுகளை சந்திக்க நேரிடலாம்.

இதேவேளை, தீவிர தேசியமென்னும் மாய மானை நம்பியும் தமிழ் மக்கள் காலத்தை விரயம் செய்ய முடியாது. ஏனெனில், தீவிர தேசியம் பேசுவோர்களிடமும் - தமிழ் மக்களின் பிரச்னைக்கான எந்தவொரு தீர்வும் இல்லை. நிலைமைகளை கையாளும்போது - தமிழ் மக்களின் நலனை நிறுத்துப் பார்க்கும் அதே வேளை, தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் நிலைப்பாடுகளை நீர்த்துக் போகச் செய்யாத முடிவுகளை கூட்டமைப்பு மேற்கொள்வதில் தவறில்லை. ஏனெனில், தொடர்ந்தும் வெறும் தேசியவாத சுலோகங்களை மட்டும் முன்வைப்பதன் மூலம், தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாக்க முடியாது. கூட்டமைப்பு இந்த விடயங்களை நிறுத்துப் பார்த்துத் தான், ஒவ்வொரு முடிவுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

# ஸ்டாலினுக்கு மஹிந்த தமிழில் கடிதம்!

**அலசுவது இராஜதந்திரி**

*இலங்கைக்கு 123 கோடி ரூபாய் பெறுமதியான உதவிப்பொருட்களை காலமறிந்த உதவியாக தமிழ் நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் வழங்கியமைக்கு இலங்கை பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ நன்றி தெரிவித்துள்ளார்.*

*தமது நன்றியைத் தெரிவிக்கும் கடிதத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமிழிலேயே எழுதியுள்ளதோடு தமது கையொப்பத்தை மட்டும் சிங்களத்தில் எழுதி தமிழக முதல்வருக்கு அனுப்பி வைத்துள்ளார்.*

*பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ அவரின் தவறான பொருளாதார கொள்கை, மற்றும் அரசியல் நடவடிக்கைகள் காரணமாக நாட்டு மக்களின் கடும் எதிர்ப்புக்கு உள்ளாகியுள்ளார். இலங்கை முன்னொருபோதும் கடனாளியாக இல்லாத அளவுக்கு தற்சமயம் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதை அவதானிக்க முடிகின்றது. இலங்கையின் கையிருப்பில் 50 மில்லியன் டொலர்கள் மட்டுமே இருக்கின்றன. இதனால் அத்தியாவசிய பொருட்கள் பண்டங்களை குறிப்பாக எரிபொருள், சமையல் எரிவாயு போன்றவற்றை மட்டுமல்ல. உணவுப்பண்டங்கள், மருந்து வகைகள் என்பவற்றைக்கூட கொள்வனவு செய்யமுடியாத நிலைக்கு இலங்கை நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.*

*இத்தகைய இக்கட்டான தருணத்திலேயே இந்திய மத்திய அரசு வழங்குகின்ற உதவிகள் ஒருபுறமிருக்க தமிழக மாநில அரசு, தமிழக சட்ட சபையின் ஏகோபித்த ஆதரவுடன், இலங்கைக்கு உதவுகின்ற தீர்மானத்தை நிறைவேற்றி தனது ஆதரவை தெரிவித்துள்ளது. இதுதவிர, எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமிகூட தமது சொந்த நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாயை இலங்கைக்கு அனுப்பிவைத்துள்ளார்.*

*அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளரும் இலங்கையின் வடக்கு - கிழக்கு மக்களின் உரிமைகளுக்காக எப்போதும் குரல் கொடுத்து வருபவருமான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழக தலைவர் வை. கோபாலசுவாமிகூட முழு இலங்கையர்களுக்குமான உதவி என்ற வகையில் மனிதாபிமானத்தை முன்னிறுத்தி இலங்கை மதிப்பில் 60 இலட்சம் ரூபாயை வழங்கியுள்ளார்.*

*தமிழகத்தின் பிரபல நட்சத்திரமும் தே. மு. தி. க. தலைவருமான விஜயகாந்த் இலங்கையர்களுக்கு உதவவென இந்திய மதிப்பிலான 5 இலட்சம் ரூபாயை அறிவித்துள்ளார்.*

*இதன்மூலம் மனிதாபிமானம் என்பது குறுகிய இன, மத மற்றும் புவியியல் எல்லைகளுக்கு அப்பால்பட்டது என்பதை நிரூபிப்பதாகவே தமிழகத்தில் அனைத்து தரப்பினரதும் இலங்கைக்கான உதவி காணப்படுகின்றது.*

*இதுதவிர, தமிழக சட்ட சபை உறுப்பினர்கள் தமது ஒரு மாதகால ஊதியத்தையும் இலங்கையர்களுக்கான நிவாரண உதவியாக வழங்கும்படியும் தமிழக முதலமைச்சர் கோரியிருந்தார். அவரின் கோரிக்கைக்கு தமது அரசியல் வேறுபாடுகளுக்கப்பால் தமிழக சட்ட சபை உறுப்பினர்கள் ஆதரவளித்துள்ளனர்.*


*தமிழக மாநிலம் இலங்கையில் யுத்தத்தால் அல்லலுற்ற மக்களுக்காக எப்போதும் குரல் கொடுத்தே வந்துள்ளது. 1987ஆம் ஆண்டு இந்திய விமானப்படை கூட வடபகுதியில் “ஒப்ரேஷன் லிபரேஷன்” இராணுவ நடவடிக்கை இடம்பெற்றபோது உணவு, மருந்துப் பொதிகளை யாழ்ப்பாண மக்களுக்கு “ஒப்ரேஷன் பூமாலை” என்ற பெயரில் பாரசூட்கள் மூலமாக தரை இறக்கியிருந்தது.*

*இதுதவிர, கடல் மார்க்கமாகவும் அன்று உணவு, மருந்து பொருட்கள் வடக்கு - கிழக்கு மக்களுக்கு இந்தியாவால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.*

*அன்று அல்லலுற்ற வடக்கு - கிழக்கு மக்களுக்கு இந்தியா உதவியபோது அதனை அரசியல் கண்கொண்டு அன்றைய தென்னிலங்கை அரசியலாளர்கள் நோக்கியிருந்தனர். ஆனால், தற்போது வடக்கு - கிழக்கு மக்களுக்கு என்ற வட்டத்தினுள் மட்டும் நின்றுவிடாது முழு இலங்கையர்களுக்கும் இந்திய மத்திய அரசு மாத்திரமல்ல. தமிழக மாநில அரசும் உதவ முன்வந்திருப்பது இலங்கையின் பேரினவாதிகளுக்கு மனிதாபிமானத்தின் அர்த்தத்தை உணர வைப்பதாகவும் இருக்கின்றது.*

*இந்தியாவின் இலங்கைக்கான உதவி இந்த ஆண்டில் (2022) இதுவரை மூன்று (3) பில்லியன் டொலர்களாக இருக்கின்றது என இந்திய தரப்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*இத்தகைய பின்னணியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலினுக்கு தமிழக மாநில அரசு வழங்கிய உதவிக்கு இலங்கை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நன்றி தெரிவித்து தமிழில் அனுப்பி வைத்துள்ள கடிதத்தை நோக்கும்போது அரசியலுக்கு வரும்முன்னர் அறுபதுகளின் இறுதியில் மஹிந்த ராஜபக்ஷ சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் ஒரு சிறந்த நூலகராக அனைத்து மொழிகளுடனும் பரிச்சயப்பட்டிருந்த நாட்களை அவருக்கு நினைவூட்டியதோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது.*


Prime Minister of Sri Lanka

2022 மே 04

மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின்,
தமிழ்நாடு மாநில அரசு
இந்தியா

திரு. மு.க ஸ்டாலின் அவர்களே,

தமிழக சட்டப்பேரவையில் தாங்கள் கொண்டுவந்த தனித் தீர்மானத்தின்படி இலங்கையில் தற்போது நிலவி வரும் கடும் பொருளாதார சூழ்நிலையில் கடும் சிரமத்திற்கு ஆளாகி உள்ள மக்களுக்கு தமிழ்நாட்டிலிருந்து உணவு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகள் அனுப்பி வைக்கப்படும் என்று தாங்கள் அறிவித்துள்ளமை தங்களது நல்லெண்ணத்தைக் குறித்து நிற்கின்றது

இலங்கைப் பொருளாதார நெருக்கடியை அண்டை நாட்டுப் பிரச்சினையாகப் பார்க்காது மனிதாபிமான அடிப்படையில் நோக்கும் தங்களிற்கும், தமிழ்நாடு மாநில அரசிற்கும் இலங்கை மக்கள் சார்பாக மிகுந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின்
பிரதமர்

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு



மே - 07 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 24
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : சப்தமி




**மேடம்**
இதுவரை இருந்து வந்த பிரச்சனை ஒரு முடிவிற்கு வரும். வீட்டிற்கு தேவையான மின்சாதனப் பொருட்களை வாங்குவீர்கள்.புதிய நண்பர்கள் விஷயத்தில் விழிப்புணர்வு தேவை. கவனமான நாள்.

**இடபம்**
பொருளாதார முன்னேற்றத்தால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும் எதிர்பார்த்த நல்ல செய்தி உங்களை தேடி வரும். சந்தோசம் கூடும். வீட்டில் சுப நிகழ்ச்சி நடத்த நாள் குறிப்பீர்கள்.

**மிதுனம்**
மனம் ஒரு நிலையில் இல்லாமல் சங்கடப்படுவீர்கள். எதிர்காலம் குறித்த சிந்தனை மேலோங்கும். நண்பர்களின் உதவியால் உங்கள் நிலையில் முன்னேற்றம் தோன்றும்.

**கடகம்**
எதிலும் தைரியத்துடன் செயல்பட்டு நன்மை அடைவீர்கள். எதிர்பாராத லாபம் உண்டாகும் என்றாலும் அதற்கேற்ற செலவு ஏற்படும். பழைய கடன் ஒன்றை அடைத்து நிம்மதி அடைவீர்கள்.

**சிம்மம்**
திடமான சிந்தனையுடன் செயல்பட்டு வெற்றி காண்பீர்கள். அந்நிய நபர்களின் உதவியால் சங்கடத்தில் இருந்து மீள்வீர்கள். பகைவர்களால் உண்டான பிரச்னைகளுக்கு முடிவு கட்டுவீர்கள்.

**கன்னி**
தொழிலில் எதிர்பார்த்த லாபத்தை அடைவீர்கள். நண்பர்களின் உதவியுடன் நினைத்ததை நிறைவேற்றி மகிழ்வீர்கள். முதலீடுகளின் மீது அதிக கவனம் செலுத்துவீர்கள்.

**துலாம்**
புதிய நட்புகளின் வழியே மகிழ்ச்சி உண்டாகும். உடல்நலனில் அக்கறை செலுத்த வேண்டியதாக இருக்கும். குடும்பத்திற்குள் நிம்மதியற்ற நிலையால் மனம் சங்கடமடையும்.

**விருட்சிகம்**
உங்கள் செயல்களில் இழுபறி இருக்கும். கடின முயற்சியால் நினைத்ததை அடைவீர்கள். நிதிநிலை கூடும் நாள். உங்கள் செயல்களில் ஏதேனும் ஒரு தடை உண்டாகும்.

**தனுசு**
நண்பர்களின் உதவியுடன் புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எடுத்த செயலால் வீட்டில் நிம்மதியும், நன்மையும் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற்கொண்டு வெற்றி அடைவீர்கள்.

**மகரம்**
வியாபாரத்தில் இன்று தன லாபம் கூடும். மகிழ்ச்சி அதிகரிக்கும். இறை அருளால் நீங்கள் ஈடுபடும் செயல்களில் நன்மை உண்டாகும். பண விஷயத்தில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பீர்கள்.

**கும்பம்**
உழைப்பு அதிகரித்து அதன் வழியே லாபம் காண்பீர்கள்.வரவு அதிகரித்தாலும் செலவிற்கு குறைவிருக்காது, மகிழ்ச்சியான நாள். தொழிலில் உங்கள் முயற்சிக்குண்டான பலன்களைக் காண்பீர்கள்.

**மீனம்**
குடும்பத்துடன் சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்று மகிழ்வீர்கள். உங்களின் திறமையால் பொது இடங்களில் புகழடைவீர்கள். பணியிடத்தில் இடமாறுதல் ஏற்படும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

# பிரச்னைக்கு தீர்வுகாண இந்தியா உதவ வேண்டும்!

## இலங்கை தமிழரின் எதிர்பார்ப்பு இதுவே என்கிறார் அண்ணாமலை!



சென்னை, மே 07

இலங்கையில் நிலவும் பிரச்னைகளுக்குத் தீர்வு காண இந்தியா உதவ வேண்டும் என்பது அங்குள்ள தமிழர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என்று தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தி இந்து (தமிழ்) பத்திரிகைக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மலையகத் தமிழர்கள், கொழும்பு தமிழர்கள், வட, கிழக்குப் பகுதி இலங்கைத் தமிழர்கள் என 3 வகையில் உள்ளனர். மலையகத் தமிழர்கள், வீடு, நிலம், கூலி உயர்வு போன்ற உரிமைகளை கேட்டு வருகின்றனர். இலங்கைத் தமிழர்கள், இந்தியா - இலங்கை இடையே 1987ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்த அடிப்படையில் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்று கோரிவருகின்றனர்.

1949ஆம் ஆண்டு இலங்கை ஒருசட்டத்தைக் கொண்டு வந்தது. அந்த சட்டத்தின் காரணமாக 7 இலட்சம் மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமை இல்லாமல் போய்விட்டது. 70 ஆண்டுகளுக்குப் பிறகு, குடியுரிமை பெற்று கடினமான பாதைகளைக் கடந்து மலையகத் தமிழர்கள் வந்துள்ளனர்.

இலங்கைத் தமிழர்கள் வசிக்கும் பகுதிகளில் உள்நாட்டுப் போருக்கு பிறகு, 42 ஆயிரம் இராணுவத்தினரை அங்கு நிறுத்தியிருப்பதால் பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. இதையெல்லாம் தாண்டி, அந்தப் பகுதி வளர்ச்சி அடைய வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது. அதற்காக வட, கிழக்குப் பகுதிகளில் இலங்கைத் தமிழர்களுக்கு 46 ஆயிரம் வீடுகள், மலையகத் தமிழர்களுக்கு 14 ஆயிரம் வீடுகள் என மொத்தம் 60 ஆயிரம் வீடுகள், யாழ்ப்பாண கலாசார மையம், துறைமுகம் உள்ளிட்ட பல விஷயங்களை இந்தியா செய்துள்ளது.

இலங்கை தமிழர்கள் இந்தியாவிடம் எதிர்பார்ப்பது, 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த இலங்கையை வற்புறுத்த வேண்டும் என்பதை. இந்தியா - இலங்கை இடையே விமானம், கப்பல் மூலமாக துரிதப் போக்குவரத்து இருக்க வேண்டும், இலங்கையிடம் இந்தியா பேசி, அரசியல் தீர்வு வழங்க வேண்டும் என்பது யாழ்ப்பாணத்தில் இருக்கக் கூடிய இலங்கைத் தமிழர்களின் எதிர்பார்ப்பாகும்.

மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரை இன்னும் அதிகமான வீடுகளை இந்தியா கட்டித் தர வேண்டும், தொழிலாளர்களுக்கு கூலியை அதிகமாகக் கொடுக்க இலங்கையை இந்தியா வற்புறுத்த வேண்டும் என்பது போன்ற எதிர்பார்ப்பு கள் உள்ளன - என்று கூறினார். (ஐ)

# கீழடியில் செங்கல் கட்டட கட்டுமானம் கண்டுபிடிப்பு!

மதுரை, மே 07

தமிழ்நாடு - சிவகங்கை - கீழடியில் நடைபெறும் 8ஆம் கட்ட அகழாய்வில் முதன் முறையாக செங்கல் கட்டுமானம் கண்டறியப்பட்டுள்ளது.

அங்கு, 5 குழிகள் தோண்டப்பட்டு அகழாய்வுப் பணி நடந்து வருகின்றன. இதுவரை நீளவடிவத் தாயக்கட்டை, பாசி மணிகள், வளையல்கள், சேதமடைந்த பானைகள், மனித தலை சுடுமண் சிற்பம் உள்ளிட்ட 500இற்கும் மேற்பட்டதொல்பொருட்கள் கண்டறியப்பட்டுள்ளன.



அகரத்தில் 2 குழிகள் தோண்டப்பட்டு சுடுமண் பானைகள் உள்ளிட்ட பொருட்கள் கண்டறியப்பட்டன. கொந்தகையில் 2 குழிகள் தோண்டப்பட்டு 21 முதுமக்கள் தாழிகள் கண்டறியப்பட்டன.

இந்நிலையில் தற்போது கீழடியில் செங்கல் கட்டுமானம் கண்டறியப்பட்டுள்ளது.

ஏற்கெனவே இப்பகுதியில் நடந்த 7 கட்ட அகழாய்வுகளில் செங்கல் கட்டுமானம் கண்டறியப்பட்டன. அதேபோல் 8ஆம் கட்ட அகழாய்விலும் தற்போது முதன்முறையாக செங்கல் கட்டுமானம் கண்டறியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# சிறையில் உணவு தராமல் சித்திவதை செய்தார்கள்!

## விடுதலையான தமிழக மீனவர்கள்

சென்னை, மே 07

“எங்களுக்கு சிறையில் உணவு தராமல் சித்திரவதைப் படுத்தினார்கள்” என்று விடுதலையான இந்திய மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் கைதாகி விடுதலையான 19 மீனவர்கள் தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள், அங்கு செய்தியாளர்களிடம் பேசும் போது,

“நாங்கள் இலங்கை கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டு, யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டோம். இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் எங்களுக்கு உணவு வழங்கப்படவில்லை. சாப்பாடு கேட்டால், ஹநாங்களே ஒருவேளை சாப்பாடு கிடைக்காமல் தவிக்கிறோம். உங்களுக்கு என்ன சாப்பாடு கேட்கிறது... பட்டினியாகக் கிடவுங்கள்“ என எங்களை அடித்துத் துன்புறுத்தினர். சரியான உணவு கிடைக்காமல் அதிக கஷ்டப்பட்டோம். இன்னும் பல சித்ரவதைகளை வெளியே சொல்ல முடியாத அளவுக்கு அனுபவித்தோம்.

சிறையில் இன்னும் 12 மீனவர்கள் சாப்பாடு கிடைக்காமல் சித்ரவதைகளை அனுபவித்து வருகின்றனர். அந்த மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். மீனவர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு காண மத்திய, மாநில அரசுகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று கூறினார்.

(ஐ)

# விரைவில் சஜித் கோ ஹோம்!

## கூறுகிறார் விமல் வீரவன்ஸ



கொழும்பு, மே 07

"சஜித் கோ ஹோம் என்ற கிராமத்தையும் அமைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது." -என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:

பிரதிச் சபாநாயகர் பதவிக்கு ரஞ்சித் சியம்பலாபிட்டியவை ஆதரிக்க சஜித் அணி இணக்கம் தெரிவித்தது. இறுதி நேரத்தில் காலை வாரியது. இது ராஜ பக்ஷ குடும்பத்தின் அரசியல் டீல். ஹேமா பிரேமதாஸவும், திருக்குமார் நடேசனும் இரகசிய பேச்சில் ஈடுபட்டுள்ளனர். என்ன பேசப்பட்டது, சந்திப்பு எங்கு நடந்தது என்பதை அம்பலப்படுத்த நாம் தயார். முடிந்தால் சஜித் விவாதத்துக்கு வரட்டும்.

சஜித் குடும்பத்தை ராஜ பக்ஷ குடும்பம் காக்கின்றது. அதனால்தான் அரசை பாது காக்கும் நோக்கில் சஜித் வேட்பாளரை நிறுத்தினார். இதன் பின்னணியில் சூழ்ச்சி உள்ளது. எனவே, சஜித் கோ ஹோம் என்றும் கூறவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது-என்றார்.(அ)



# யாழ். மாவட்டத்திலும் நேற்று ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு!

## தனியார் பஸ் சேவைகள் இல்லை வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன



யாழ்ப்பாணம், மே 07

**நாட்டில் தற்போது உள்ள கோட்டாபய அரசை வீட்டுக்கு செல்ல வலியுறுத்தி நூற்றிற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து நேற்று நாடு பூராகவும் பூரண ஹர்த்தால் கடையடைப்பு மேற்கொண்ட நிலையில் அதற்கு யாழ்ப்பாண மாவட்டத்திலும் பூரண ஆதரவு கிடைத்தது.**

யாழ்.நகரில் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டதோடு தனியார் பஸ் சேவைகள் இடம்பெறவில்லை. அரசு பஸ் சேவைகள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சேவையில் ஈடுபட்டன.

நகர்ப்புறங்களில் பொதுமக்களின் நடமாட்டம் குறைவடைந்து காணப்பட்டது. அரச, தனியார் வங்கிகள் மூடப்பட்டதோடு அரச திணைக்களங்களின் சேவைகளும் பாதிக்கப்பட்டன.

யாழ். குடாநாட்டில் அத்தியாவசிய சேவைகளான பார்மசி, உணவு விற்பனை நிலையங்களை தவிர்ந்த ஏனைய விற்பனை நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டதால் யாழ். நகரம் வெறிச்சோடி காணப்பட்டது. (அ-03)

# வவுனியாவிலும் நேற்று முழுமையான ஹர்த்தால்

வவுனியா, மே 07

அரசாங்கத்திற்கு எதிராக வவுனியாவில் நேற்றுபூரண கதவடைப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதால் இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

மக்களை வதைக்கும் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புவோம் என்னும் தொனிப் பொருளில் 2000 இற்கும் மேற்பட்ட தொழிற் சங்கங்களால் நாடு பூராகவும் கதவடைப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அந்தவகையில், அதற்கு ஆதரவு தெரிவித்து வவுனியாவில் உள்ள வர்த்தக நிலையங்கள், மொத்த மரக்கறி விற்பனையகம், தபாலகம், வங்கிகள், அனைத்தும் மூடப்பட்டு மக்கள் அரசாங்கத்துக்கு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அத்துடன், தனியார் பஸ் சேவை, முச்சக்கர வண்டிகள் என்பனவும் சேவையில் ஈடுபடாமையால் போக்குவரத்து சேவையும் பாதிப்படைந்தன.

இருப்பினும் வீதிகளில் மக்களின் நடமாட்டத்தை குறைந்தளவில் அவதானிக்க முடிந்தது. (அ)

# அஜித் நிவாட் கப்ராலின் பயணத் தடை நீடிப்பு!

கொழும்பு, மே 07

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள வெளிநாடு செல்வதற்கான தடை எதிர்வரும் 23ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேலதிக நீதிமன்ற நீதவான் ஹர்ஷன கெக்குனவல நேற்று முன்தினம் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

அஜித் நிவார்ட் கப்ரால் மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த 2005 முதல் 2015 வரையான காலப்பகுதியில் பொது நிதியை மோசடி செய்ததாக ஆறு குற்றச்சாட்டுகள் இவருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ளன. (அ)

# லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்தின் இலாபம் 248 வீதத்தால் உயர்வு

கொழும்பு, மே 07

லங்கா ஐ.ஓ.சி. இந்நிறுவனம் இந்த ஆண்டின் முதல் காலாண்டில் மாத்திரம் 3.37 பில்லியன் ரூபா வரிக்கு பிந்திய இலாபத்தைப் பெற்றுள்ளது.

கடந்த ஆண்டின் முதல் காலாண்டில் குறித்த நிறுவனம் 968 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியிருந்தது.

அதற்கமைய, கடந்த வருடத்தின் முதல் காலாண்டு இலாபத்துடன் ஒப்பிடுகையில், இவ்வருடம் லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் 248 சதவீதம் அதிகமாக இலாப மீட்டியுள்ளது.

கடந்த வருடத்தின் இறுதி காலாண்டிலும் லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தின் வருமானம் 42.7 சதவீதம் அதிகரித்து 29.5 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளது.

விற்பனைச் செலவுகள் 29.5 சதவீதம் அதிகரித்து 24.5 பில்லியன் ரூபாவாக இருந்ததுடன், இறுதி காலாண்டில் 5 பில்லியன் ரூபா இலாபத்தை பெற்றிருந்தது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 192 சதவீத அதிகரிப்பாகும். (அ)

# பருத்தித்துறை கிராமக்கோடு வீதியில் மயங்கி விழுந்த முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே 07

வடமராட்சி, பருத்தித்துறை - கிராமக்கோடு பகுதியில் வீதியால் நடந்து சென்றபோது மயங்கி விழுந்த முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை கிராமக்கோடு பகுதியில் வீதியால் நடந்து சென்ற முதியவர் ஒருவர் மயங்கி விழுந்துள்ளார்.

நேற்று முன் தினம் மதியம் 11.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதையடுத்து அவர்அவசர நோயாளர் காவு வண்டி மூலம் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்டார்.

அவசர சிகிச்சை பிரிவில் வைத்துச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நிலையில் நேற்றுக் காலை 6 மணியளவில் அவர் உயிரிழந்தார் என வைத்திய சாலை தகவல்கள் தெரிவித்தன.

இவ்வாறு உயிரிழந்த முதியவர் குறித்து எதுவித தகவல்களும் தெரியாது எனவும் இதுவரை உரியவர்கள் எவரும் வரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

## 2.3 மில்லியன் டொலர் பெறுமதியான

# அத்தியாவசிய மருந்துகளை வழங்குகிறது பங்களாதேஷ்

கொழும்பு, மே 07

இலங்கையில் அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், 2.3 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அத்தியாவசிய மருந்துகளை வழங்க பங்களாதேஷ் முன்வந்துள்ளது.

இலங்கைக்கு 2.3 மில்லியன் அமெரிக்க டொலர் (830 மில்லியன் ரூபா) பெறுமதியான அத்தியாவசிய மருந்துகளை நன்கொடையாக வழங்குவதை பங்களாதேஷ் உறுதி செய்துள்ளது.

சுமார் 56 வகையான அத்தியாவசிய மருந்துகள் இவ்வாறு நன்கொடையாக வழங்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார். (அ)

ஈழநாடு



# ‘மஹிந்த சரணம் கச்சாமி’ என்று கூறியவர் சாணக்கியன் எம்.பியே!



## சபையில் வைத்து ரணில் பதிலடி

கொழும்பு, மே. 07

**தான் மஹிந்த ராஜபக்ஷவுடன் இருப்பதாக இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்த கருத்தை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க வன்மையாகக் கண்டித்துள்ளார்.**

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த ரணில், நான் ராஜபக்ஷர்களுடன் இருப்பதாக சாணக்கியன் எம்.பி குறிப்பிட்டார். ஆனால் நான் அவர்களுடன் இருக்கவில்லை, ராஜபக்ஷ பிரபாகரனுடன் சேர்ந்து என்னை தோற்கடித்த நினைத்தார்.

நான் இராசமாணிக்கம் சாணக்கியன் தொடர்பில் ஒரு விடயத்தை இங்கு தெரிவிக்க வேண்டும். 2013ஆம் ஆண்டு பெப்ரவரி 21ஆம் திகதி அருந்திக்க பெர்னாண்டோ மற்றும் சாணக்கியன் ஆகியோரை சுதந்திரக் கட்சியின் ஏற்பாட்டாளர்களாக அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்திருந்தார்.

எனவே, நான் இல்லை மஹிந்த பின்னால் சென்றது, சாணக்கியன் எம்.பியே அவர்கள் பின்னால் சென்றார். அவர்தான் அப்போது “மஹிந்த சரணம் கச்சாமி, பஸில் சரணம் கச்சாமி, நாமல் சரணம் கச்சாமி” என்று அவர்கள் பின்னால் சென்றிருந்தார். எனவே, ஏன் சாணக்கியன் எம்.பி என்னைப் பற்றி இவ்வாறு தெரிவித்தார் என்பது புரியவில்லை - என்றார். (அ)



# முழுமையாக நேற்று முடங்கிய மலையகம்

கொழும்பு, மே. 07

நாடு தழுவிய ரீதியில் இடம்பெறும் அரசுக்கு எதிரான நேற்றைய ஹர்த்தால் நடவடிக்கை காரணமாக மலையகமும் முழுமையாக முடங்கியது.

மலையகத்தின் பாடசாலைகள் இயங்காத நிலையில் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் இன்றி பாடசாலைகள் வெறிச்சோடி காணப்பட்டன.

பொதுப் போக்குவரத்து சேவையில் இருந்து தனியார் பஸ்கள் விலகியதன் காரணமாக பொதுப் போக்குவரத்தும் பெருமளவில் பாதிக்கப்பட்டதுடன். ஒரு சில அரச பஸ்கள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டதை காண முடிந்தது.

பெருந்தோட்ட தொழிலாளர்களும் முழுமையாக பணி பகிஷ்கரிப்பை மேற்கொண்டதுடன் ஒரு சில தோட்டங்களில் கறுப்பு கொடிகளும் பறக்கவிடப்பட்டன.சில தோட்டங்களில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றன.

ரயில் ஊழியர்களும் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டதனால் ரயில் நிலையங்களும் மூடப்பட்டு வெறிச்சோடி காணப்பட்டன.

பெரும்பாலான அரச நிறுவனங்களின் ஊழியர்களும் பணி பகிஷ்கரிப்பில் பங்குபற்றிய நிலையில் அரச நிறுவனங்கள் மூடிய நிலையில் காணப்பட்டன.

மலையகத்தின் வியாபாரத் துறையினரும் இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்துக்கு தமது ஆதரவை வழங்கி தமது வியாபார ஸ்தாபனங்களை மூடியதால் மலையக நகரங்கள் முழுவதுமாக கடைகள் பூடப்பட்டு நகரங்கள் வெறிச்சோடி காணப்பட்டன. (அ)

# ஒன்றுகூடும் உரிமைகளை இலங்கை மதிக்கவேண்டும்!

## மன்னிப்புச் சபை வலியுறுத்து

கொழும்பு, மே. 07

கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான ஒன்றுகூடல் உரிமைகளை இலங்கை அதிகாரிகள் மதிக்கவேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.

மனித உரிமைகளை அமைதியான முறையில் செயல்படுத்தியதற்காக கைது செய்யப்பட்டவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் கைவிடப்படவேண்டும் என்றும் சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபையின் தெற்காசிய பிராந்திய பணிப்பாளர் யாமினி மிஸ்ரா அறிக்கையொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

போராட்டக்காரர்களுக்கு இலங்கைப் பாராளுமன்றத்துக்கு வெளியே அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்யவும், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வரும் நிலையில் தமது பாராளுமன்ற உறுப்பினர்களிடம் , நிலைப்பஷபாடுகளை வெளிப்படுத்தவும் அவர்களுடன் பேசவும் உரிமை உண்டு.

மனித உரிமைகளை அமைதியான முறையில் செயல்படுத்தியதற்காக கைது செய்யப்பட்ட அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் கைவிடப்படவேண்டும்.

இலங்கை அதிகாரிகள் கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியான ஒன்றுகூடல் உரிமைகளை மதிக்கவேண்டும். அவற்றை பாதுகாக்க வேண்டும். ஊக்குவிக்க வேண்டும் , நிறைவேற்ற வேண்டும். மேலும் மக்கள் தங்கள் மனித உரிமைகளை சுதந்திரமாகப் பயன்படுத்த அனுமதிக்கவேண்டும். மனித உரிமைகள் மீது சுமத்தப்படும் எந்தவொரு கட்டுப்பாடுகளும் சட்டத்தால் மாத்திரமே வழங்கப்பட வேண்டும்.

இந்த கைதுகள் தன்னிச்சையானதும் சட்டவிரோதமானதுமாகும் என்பது சந்தேகத்திற்கிடமற்றது. அண்மையில் மிரிஹானை போராட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர்கள் , பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது மோசமாக நடத்தப்பட்டனர்.

அத்தோடு அவர்களுக்கு சட்ட ஆலோசகரை அணுகவும் அனுமதி மறுக்கப்பட்டது. பாராளுமன்ற வளாகத்தில் கைது செய்யப்பட்ட போராட்டக்காரர்களுக்கும் அதே உரிமை மீறல்களை அதிகாரிகள் செய்யாமல் இருப்பது மிகவும் முக்கியமானது.

அதிகப்படியான அதிகாரத்தைப் பயன்படுத்துதல், அச்சுறுத்துதல் மற்றும் சட்டவிரோதக் கைதுகள் ஆகியவை கருத்துமுரண்பாடு மற்றும் அமைதியான ஒன்றுகூடலுக்கு இலங்கை அதிகாரிகள் பதிலளிக்கும் ஒரு வடிவமாகத் தெரிகிறது.

இந்த அடக்குமுறை நடவடிக்கைகள் சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் இலங்கையின் கடமைகளை தெளிவாக பூர்த்தி செய்யவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பைத்தியக்காரர்கள்போல் நடந்துகொள்ளவேண்டாம்

## சபையில் கோரினார் சபாநாயகர்

கொழும்பு, மே. 07

பாராளுமன்றத்தில் பைத்தியக்காரர்கள்போல் நடந்து கொள்ள வேண்டாம் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் பூர்வாங்க நடவடிக்கைகள் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே அவைத் தலைவரின் உத்தரவை பாராளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்கத் தொடங்கிய போதே சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் பைத்தியக்காரத்தனமாக நடந்து கொண்டால் சபை ஒத்திவைக்கப்படும் என்றும் சபாநாயகர் கூறினார். (அ)

# 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா நான்காவது டோஸ்!

கொழும்பு, மே. 07

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசியின் நான்காவது டோஸ் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன இதனைத் தெரிவித்தார். (அ)

# நிர்வாக முடக்கலில் ஈடுபடும் அரச ஊழியருக்கு சம்பளம் வழங்கப்படமாட்டாது என்பது பொய்!

கொழும்பு, மே. 07

நேற்று நிர்வாக முடக்கலில் ஈடுபட்ட அரச ஊழியர்களுக்கு மே மாதச் சம்பளம் வழங்கப்படமாட்டாது என வெளியாகிய செய்தி முற்றிலும் பொய்யானது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

நேற்று நிர்வாக முடக்கலில் ஈடுபட்ட அரச ஊழியர்களுக்கு மே மாதத்துக்கான வேதனம் வழங்கப்படமாட்டாது என சமூகவலைத்தளங்களில் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் கடிதத் தலைப்பில் செய்தியொன்று பகிரப்பட்டது.

எனினும், குறித்த அறிவிப்பு பொய்யானது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விளக்கமொன்றை வழங்கியுள்ளது. (அ)

# மரத்துடன் மோதியது வைத்தியரின் வாகனம்!

முல்லைத்தீவு, மே. 07

முல்லைத்தீவு - முறிகண்டி செல்வபுரம் பகுதியில், ஏ-9 வீதியில், வைத்தியர் ஒருவரின் ஜீப் ரக வாகனம் விபத்துக்குள்ளாகி உள்ளது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில், வைத்தியருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டன.

முறிகண்டியிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த ஜீப் ரக வாகனமே இவ்வாறு விபத்துக்குள்ளானது. வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வீதி அருகில் உள்ள மரங்களுடன் மோதியுள்ளது.

குறித்த வைத்தியர் அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் கடமையாற்றி வருபவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# மாவனெல்லை புத்தர் சிலை உடைப்பு: 14 சந்தேக நபர்களும் குற்றமற்றவர்கள்

கொழும்பு, மே. 07

மாவனெல்லையில் புத்தர் சிலைகளுக்கு சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்டு, மூன்று ஆண்டுகளுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 14 சந்தேகநபர்களையும், குற்றமற்ற வர்களாகக் கருதி விடுவிக்க மாவனெல்லை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் மேலும் 7 பேரை பிணையில் விடுவிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது மாவனெல்லை நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்தார். (அ)

# பாராளுமன்றத்தையும் மக்கள் தீயிடுவார்கள்!

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

கொழும்பு, மே 07

**இரும்பு வேலிகளினால் பாராளுமன்ற சுற்றுவட்டத்தை முடக்கி, பொலிஸ்,இராணுவ பாதுகாப்புடன் பாராளுமன்ற கூட்டத்தொடரை நடத்துவதையிட்டு சபாநாயகர் உட்பட பாராளுமன்றின் அனைத்து உறுப்பினர்களும் வெட்கப்படவேண்டும். பாதுகாப்பு அரண்களை தகர்த்து நாட்டு மக்கள் என்றாவது பாராளுமன்றத்தை தீயிடுவார்கள் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் சபையில் எச்சரித்தார்.**

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்தொடரின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்களின் கருத்துகளுக்கு பாராளுமன்றில் மதிப்பளிக்கப்படவில்லை என்ற காரணத்தினாலும்,மக்கள் பாராளுமன்றத்தை முற்றுகையிடுவார்கள் என்ற அச்சத்தினாலும் இரும்பு வேலிகளினால் பாராளுமன்றில் நாற்புறங்களும் முடக்கப்பட்டு,பொலிஸ், இராணுவத்தினரது பாதுகாப்புடன் பாராளுமன்ற நடவடிக்கைகள் இடம்பெறுவதையிட்டு சபாநாயகர் உட்பட 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் வெட்



கப்படவேண்டும்.

நாட்டு மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிக்காமல் செயல்பட்டால் மக்கள் என்றாவது பாராளுமன்றத்தை தீயிடுவார்கள். மக்களின் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. ஜனாதிபதி எங்கு உள்ளார் என்று தெரியவில்லை,அவரால் ஜனா திபதி செயலகத்துக்குக் கூட செல்ல முடியாத நிலையில் உள்ளார்.

மறுபுறம் பிரதமர் எவ்வித விழாக்களுக்குச் செல்லவும், அமைச்சர்கள் வீதிக்கும் செல்லவும் முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலைமை வேறெங்கும் கிடையாது.

அரசாங்கத்திலிருந்து வெளியேறி பாராளுமன்றில் சுயாதீனமாக செயற்படுகிறோம் என்று குறிப்பிட்டுக்கொள்பவர்களின் உண்மை தன்மை தற்போது வெளிப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவை அவலட்சண அமெரிக்கர் என விமர்சித்தவர்கள் தற்போது அவருடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுப்படுகிறார்கள்.யார் டீல் அரசியலில் ஈடுப்படுகிறார்கள் என்பதை நாட்டு மக்கள் தெரிந்துக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)




# பாராளுமன்ற வளாகத்தில் உள்ளாடைப் போராட்டம்!

கொழும்பு, மே 07

பாராளுமன்ற வளாகத்தில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று முன்தினம் ஸ்தாபிக்கப்பட்ட "ஹொரு கோ கம" என்ற போராட்டக் களத்தில் நேற்று வித்தியாசமான போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது .

பொலிஸாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள இரும்புக் கம்பிகளைக் கொண்ட வேலிகளில் உள்ளாடைகளைக் காட்சிப்படுத்தி அந்த உள்ளாடைகளில் "கோ ஹோம் கோட்டா" என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தி இந்தப் போராட்டம் இடம் பெறுகின்றது.

புதிதாக நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட போராட்டக் களத்துக்குப் பெருந்தொகையான வெளியாட்கள் உணவுப் பண்டங்களையும் தண்ணீர்ப் போத்தல்களையும் மற்றும் மருந்து வகைகளையும் கொண்டு வந்து கொடுத்து உதவி புரிந்து வருகின்றனர்.

இந்நிலையிலேயே உள்ளாடைகளைக் காட்சிப்படுத்தி இந்தப் போராட்டத்தைப் பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஜனாதிபதியின் பாதுகாப்புக் குழுவில் 100 பொலிஸ் புலனாய்வு அதிகாரிகள்!

கொழும்பு, மே 07

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பாக தீர்மானங்களை மேற்கொள்வதற்காக சிரேஷ்ட அதிகாரிகளின் தரவரிசையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பல உள்ளூர் பத்திரிகைகளை மேற்கோள்காட்டி இந்த செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஒருவர், ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவுக்கு உதவியாக ஒரு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரை நியமித்துள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமல் பெரேரா ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவின் பொலிஸ் குழுக்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேநேரம், ஜனாதிபதியின் பாதுகாப்புக்காக புலனாய்வு மற்றும் கண்காணிப்புக்கு பொறுப்பான சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பி.டி. ஜெயலத் உட்பட 100 பொலிஸ் புலனாய்வு அதிகாரிகள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியின் பாதுகாப்பு தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று கடந்த 4ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்றதாக அந்த செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது. (அ)




# மாந்தை மேற்கில் மக்கள் போராட்டம்

மன்னார், மே. 07

நாடளாவிய ரீதியில் நேற்று வெள்ளிக்கிழமை அரசாங்கத்துக்கு எதிரான ஹர்த்தால் மேற்கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மக்கள் நேற்றுக் காலை அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வர்த்தகர்கள், ஓட்டோ உரிமையாளர்கள், அமைப்புகளின் பிரதிநிதிகள்,மக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

காலை 9.30 மணியளவில் நெடுங்கண்டல் சந்தியில் ஆரம்பமான ஊர்வலம் மாந்தை மேற்கு பிரதேச செயலக வீதியை சென்றடைந்தது.

இதன்போது கண்டன ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்கள் அரசின் நடவடிக்கையை கண்டித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறிப்பாக எரி பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை, விலையேற்றம், எரிவாயு தட்டுப்பாடு மற்றும் விலை ஏற்றம், அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம்,விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்னைகள் ஆகியவற்றை முன்வைத்து அரசின் செயல்பாட்டை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, மன்னார் நகர பகுதிகளில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டன. (அ)

# அரசுக்கு பெரும்பான்மை இல்லை!

கொழும்பு, மே 07

பிரதிச் சபாநாயகரை தெரிவு செய்வதற்கான தேர்தலில் அரசாங்கத்துக்கு பெரும்பான்மை இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பிரதிச் சபாநாயகர் பதவியை பெறுவதற்கு ரஞ்சித் சியம்பலாபிட்டிய 148 வாக்குகளைப் பெற்றுள்ளதாகவும், வாக்களித்த 40 சுயேச்சை உறுப்பினர்கள் குழு நீக்கப்படும்போது அரசாங்க உறுப்பினர்களின் எண்ணிக்கை 108 ஆக குறையும் எனவும் அவர் கூறினார்.

டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட மூவரும், சுயேச்சையாக உள்ளதாக தெரிவித்த அரசாங்கத்தின் பத்து பேரும் இணைந்தால் அரசாங்கத்தின் பலம் 95 ஆசனங்களாக குறையும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்விடயத்தில் எதிர்க்கட்சிகள் உரிய முறையில் செயல்பட்டிருந்தால் அரசாங்கத்திற்கு எதிராக 121 வாக்குகளைப் பெற்றிருக்க முடியும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார். (அ)

# ரணிலுக்கு பாதுகாப்பு உடன் வழங்கவேண்டும்

## சபையில் தினேஷ் கோரிக்கை

கொழும்பு, மே 07

முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவுக்கு பாதுகாப்பு வழங்க தலையிடுமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் சபைத் தலைவர் தினேஷ் குணவர்தன கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது வீட்டை சுற்றி வளைக்கும் திட்டம் இருப்பதாகவும், அப்படியானால், உரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தமக்கான பாதுகாப்பை வழங்கத் தலையிடுமாறும் ரணில் விக்ரமசிங்க கோரியதாக அவர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எனவே, சபையில் கூறப்படும் அறிக்கைகள் தொடர்பாக எந்தவொரு அரசியல் கட்சியும் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரையும் மிரட்டுவது ஜனநாயக நடைமுறையல்ல என்றும் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

ஒரு குழு தனது வீட்டை சுற்றி வளைக்க திட்டமிட்டுள்ளதாக ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றில் கூறியதைய டுத்து தினேஷ் குணவர்தன இவ்வாறு தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



# மீண்டும் தொடங்கிவிட்டதா பனிப்போர் காலம்?

ரஷ்யா உக்ரைன் மீது போர் தொடுத்த பிறகு உலக நாடுகளுக்கு இடையிலான சர்வதேச அரசியல் சூடுபிடித்துள்ளது. இந்த பரபரப்பான உலக அரசியல் சூழலில் இந்தியக் குடியரசுக்கு மிகுந்த முக்கியத் துவம் கிடைத்துள்ளது. ரஷ்யாவுடன் நேரடியாகப் போரிட முடியாத நிலையில் அமெரிக்க - ஐரோப்பிய நாடுகள் அதற்கு பொருளாதாரத் தடை விதித்துள்ளன. ஏனெனில் உக்ரைனுக்கு ஆதரவாக அந்த நாடுகள் போரில் ஈடுபட்டால் அணு ஆயுதங்களைப் பயன்படுத்த தயங்க மாட்டோம் என ரஷியா அறிவித்துள்ளது. அதனால் உக்ரைனுக்கு மறைமுகமாக ஆயுத உதவிகள் செய்வது மற்றும் பொருளாதாரத் தடைகளின் மூலம் ரஷ்யாவைத் தனிமைப்படுத்துவது ஆகிய முயற்சிகளில் மேற்கத்திய நாடுகள் இறங்கியுள்ளன.

ஆனால் தடைகள் மூலம் ரஷ்யாவைப் பணிய வைப்பது சுலபமாக இல்லை. சீனா, ரஷ் யாவுக்கு முழு ஆதரவை வழங்கி வருகிறது. உலகில் பல நாடுகள் ரஷ்யாவுடன் முக்கியமான வர்த்தக உறவுகளில் உள்ளன. ஆயுதங்களை வாங்குகின்றன. அவற்றால் திடீரென ரஷ்ய உறவைத் துண்டித்துக் கொள்ள முடியாது. இந்த நிலையில் இந்தியாவும் ரஷ்யாவுடன் உறவைத் தொடர்வதும், மலிவான விலையில் பெட்ரோல் வாங்குவதும், ஆயுதங்கள் வாங்குவதும், பல்வேறு ராணுவ ஒப்பந்தங்களைத் தொடர்வதும் பிரச்சினைக்குரியதாக அமெரிக்க - ஐரோப்பிய நாடுகள் பார்க்கின்றன.

பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்சன் சென்ற வாரம் இந்தியாவுக்கு வந்தார். அடுத்து ஐரோப்பிய யூனியன் அதிபர் வந்திருந்தார். அவர் ரஷ்யாவும், சீனாவும் முழுமையான தங்கு தடையற்ற உறவினை அறிவித்துள்ளதைச் சுட்டிக்காட்டி எச்சரித்துப் பேசினார். இந்தியா போல ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தலை நடத்தும் மக்களாட் சியைப் பேணும் நாடு, உலகின் சுதந்திர நாடு களுடன் இணைந்து ரஷ்ய ஆக்கிரமிப் பையும், ரஷ்யா - சீனா கூட்டுறவையும் எதிர்க்க வேண்டும் என்றார். அடுத்த மாதம் ஜப்பானில் அமெரிக்க அதிபர், இந்தியப் பிரதமரைச் சந்திக்கிறார். எத் தனை அழுத்தம் கொடுத்தாலும் இந்தியா வால் எந்தப் பக்கமும் உடனடியாக சாய முடியாது. இந்த நிலை இந்தியாவுக்கு ஆபத்தான சிக்கலா அல்லது அனுகூல மான சந்தர்ப்பமா என்பதையும் திட்ட வட்டமாகக் கூற முடியாது.

பிரச்சினை என்னவென்றால் அமெரிக் காவும், ஐரோப்பாவும் தரும் ஆயுத உதவிகளைக் கொண்டு உக்ரைன் சிறிது காலம் தாக்குப் பிடிக்கலாமே தவிர, அது ரஷ்யாவைத் திருப்பி தாக்குவதோ, தோற் கடிப்பதோ சாத்தியமில்லை. ரஷ்யாவின் மீது விதிக்கக்கூடிய தடைகளையெல் லாம் விதித்தாயிற்று பொருளாதாரத் தடை என்பது இரண்டு புறமும் வெட்டும் கத்தி. ரஷ்யாவிலிருந்து எரிவாயு போன் றவை கிடைக்காததால் ஐரோப்பிய நாடு களின் பொருளாதாரமும் பாதிக்கப்படும். இந்த நிலையில் என்ன செய்து ரஷ்யா வின் பிடியிலிருந்து உக்ரைனை மீட்பது என்று புரியாமல் மேற்கத்திய நாடுகள் திணறுகின்றன. ரஷ்யா, சீனா, வடகொரியா ஆகிய மூன்று நாடுகளும் அணு ஆயுதங்களுடனும், திறன் மிக்க ஏவுகணை களுடனும் காத்திருக்கின்றன. சரி, உக்ரைனை ரஷ்யா பிடித்துக்கொள்ளட்டும் என்று விட்டுவிடலாமா என்றால் இத்தனை நடந்த பிறகு அவ்விதம் பின்வாங் குவது மோசமான முன்மாதிரியாகிவிடும். ஏற்கனவே ஆஃப்கானிஸ்தானை இருபதாண்டு ஆக்கிரமிப்புக்குப் பிறகு அமெரிக்கா தாலிபான்களிடமே விட்டுவிட்டு வரவேண்டியதாயிற்று. அங்கும் தாலிபானுக்கு பின் புலத்தில் சீன ஆதரவு இருக்கிறது. அதனால் சீனாவுக் கும், அமெரிக்காவுக்குமான புதிய பனிப்போர் காலம் தொடங்கிவிட்டது என்பதே பலர் கருத்தாக இருக்கிறது.

### இருபதாம் நூற்றாண்டின் பனிப்போர் வரலாறு

நான் சிறுவனாக இருந்த அறுபதுகளில் ஆன்றோர் களும், சான்றோர்களும் உலகைக் குறித்து கொண்டி ருந்த மிகப்பெரிய கவலை மூன்றாவது உலகப் போர் மூளுமா, அணு ஆயுத பெருவெடிப்பு நேர்ந்து மானு டம் அழிந்துபோகுமா என்பதாகத்தான் இருந்தது. ஏனெனில் உலக அரசியல் இரு துருவங்களுக்கிடையே சிக்கிக்கொண்டிருந்தது. சுதந்திரவாத - தனியுடமை கோட்பாட்டை பின்பற்றும் அமெரிக்கா தலைமை யிலான நாடுகள் ஒரு துருவம், அரசு மைய - பொதுவு டமை கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளும் ரஷ்யா தலைமையிலான நாடுகள் இன்னொரு துருவம். உலக நாடுகள் எந்த பாதையைத் தேர்வு செய்யப் போகின் றன என்பதை தீர்மானிப்பதில் இரண்டு அணிகளும் முனைப்புக் காட் டியதால் அவர்களுடைய நேர்முக, மறைமுக தலையீடுகள் பல்வேறு நாடுகளில் இருந்தன. இதுவே பனிப் போர் காலம் என அறியப்பட்டது.

சீனாவும் அரசுமைய - பொதுவுடமை நாடுதான் என்றாலும் ரஷ்யாவுடன் அதற்கேற்பட்ட முரண்களால் அது தனிப்பாதை அமைக்கத் தொடங்கி யது. இந்த நிலையில்தான் அணிசேரா நாடுகள் என்ற கோட்பாடும், மூன்றாம் உலக நாடுகள் என்ற சிந்தனையும் உருவாயின.

அமெரிக்கா பொதுவுடமை சித் தாந்தம் பரவக் கூடாது என்ற அச்சத் தில் பல நாடுகளின் அரசியலில் தலை யிட்டது. வியட்நாம் மிக முக்கியமான உதாரணம். அங்கே ஹோசிமின் தலை மையில் உருவான வெகுஜன ஆதரவு பெற்ற பொதுவுடமை அரசுக்கு எதிராக தெற்கு வியட்நாம் பகுதியைத் தூ ண்டி, அந்த அரசுக்கு ஆதரவாக அமெரிக்கா படைகளை அனுப்பியது. வடக்கு வியட்நாம் மீது கடுமையான தாக்குதல்களை நடத்தியது. உலகெங்கும் அமெரிக்காவுக்கு எதிராக கிளர்ச்சிகள் நடந்தன. ஐரோப்பாவில் அறுபதுகளின் இறுதியில் நிகழ்ந்த மாண வர் கிளர்ச்சிகளில் வியட்நாம் ஆதரவு, அமெ ரிக்க எதிர்ப்பு முக்கிய பங்கு வகித் தது. வியட்நாமிலி ருந்து அமெரிக்கப் படைகள் தோல்வியுடன் திரும்பின. ஹோசிமின் நிறுவிய அரசு வென்றது. தென் அமெரிக்க நாடான சிலியில் பொதுவுடமை சிந்தனை கொண்ட, வெகுஜன ஆதரவுமிக்க அலெண்டே அரசுக்கு எதிராக ராணுவ கிளர்ச்சியை அமெரிக்கா தூ ண்டிவிட்டது. அலெண்டே கொல்லப்பட்டார்.

தொடர்ந்து இஸ்ரேல், அரேபிய நாடுகள் போர்கள், இந்தியா - பாகிஸ் தான் போர்கள், ஈரான் - ஈராக் போர் உள்ளிட்ட பல்வேறு போர் களிலும் பனிப்போர் கால அமெரிக்க, ரஷ்ய வல்லரசு தலையீடுகள் நேரிடை யாகவும், மறைமுகமாகவும் இருந்து வந்தன. கொமெனியின் ஈரானை கட்டுப்படுத்த சதாம் ஹூசை னைத் தூண் டிய அமெரிக்கா, பின்னர் சதாம் ஹூ சைன் குவைத்தை கைப்பற்ற அவர் மீது படையெ டுத்தது. அதற்கு முன்னர் ஆஃப்கானிஸ்தானை சோவியத் யூனியன் தன் பிடிக்குள் கொண்டுவர அதனை அகற்றும்பொருட்டு ஜிஹாதி குழுக்களை ஊக்கப்படுத்தியது அமெரிக்கா. சீனா ஏற்கனவே அமெரிக்க முதலீட்டுக்கு அனுமதி வழங்கி சீர்திருத்தங்களைச் செய்தது. டெங் சியோபிங் ஆட்சியில் சீனா அரசு மையத்துவம், மக்கள் நல ஆட்சி, எல்லைக்குட்பட்ட முதலீட்டிய சந்தை பொருளாதாரம் என்று மறு சீரமைப்பு செய்துகொண்டது.

இதற்கிடையில் கோர்ப்பசேவ் ஆட்சிக்கு வந்தபிறகு எண்பதுகளின் பிற்பகுதியில் சோவியத் யூனியனில் பல சீர்திருத்தங்கள் கொண்டுவரப் பட்டன. பெரஸ்தொரய்கா, கிளாஸ் நாஸ்ட் என அறியப்பட்ட அந்தச் சீர்திருத்தங்கள் ரஷ்ய சமூகத்தை அரசின் பிடியிலிருந்து விடுவிக்க தொடங்கின. 1989ஆம் ஆண்டு பெர்லின் சுவர் மக்கள் எழுச்சியால் தகர்க்கப்பட்டு ரஷ்யா வசமிருந்த கிழக்கு ஜெர்மனியும், சுதந்திர பொரு ளாதாரமாக இருந்த மேற்கு ஜெர்மனியும் இணைந்தன. அதைத்தொடர்ந்து 1991ஆம் ஆண்டு சோவியத் யூனியன் உடைந்து பதினைந்து நாடுகளாகப் பிரிந்தது. ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சி ஆட்சி கலைக்கப்பட்டது. எழுபதாண்டு காலமாக பொதுவு டமை தத்துவத்தின் முக்கிய அடை யாளமாக விளங்கிய சோவியத் யூனியன் உடைந்ததும், கம்யூனிஸ்டு கட்சி ஆட்சி முடிவுக்கு வந்ததும் உலகெங்கும் அதிர்வலைகளை ஏற்படுத்தின.

### ஒரு துருவ உலகம்

அமெரிக்காவுக்கு எதிராக தொடர்ந்து சர்வதேச அரங்கில் நிழல் யுத்தம் நடத்தி வந்த சோவியத் யூனியன் வீழ்ந்த பிறகு, உலக அரசியல் ஒற்றை துருவ அரசியலாக மாறிவிட்ட தாக கருதப்பட்டது. பொதுவுடமை தத்துவம் காலாவதியாகிவிட்டதாகத் தோன்றியது. இனி உலகம் முழுவதும் சுதந்திரவாத - மக்களாட்சி - முதலீட்டிய சந்தை பொருளாதாரமே நிலவும் எனக் கருதப்பட்டது. முதலீட்டிய அமைப்பில் அடங்கி யுள்ள சுரண்டல், பொருளாதார ஏற்றத்தாழ்வு ஆகிய வற்றை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்களுக்கு இது வருத் தத்தை அளித்தாலும், பனிப்போர் கால யுத்தங்கள் முடிவுக்கு வருவதும், அணு ஆயுத போர் குறித்த அச்சங்கள் அகல்வ தும் நன்மையாகக் கருதப்பட்டது.

தத்துவார்த்த அளவில் இது உலகின் எதிர்காலம் குறித்த பல கணிப்புகளுக்கு வழி வகுத்தது. இனிமேல் முரண்களுக்கு இடமில்லை மெள்ள மெள்ள உலகம் முழுமையான சுதந்திரவாத - முதலீட்டிய கட்டமைப் புக்கு வந்து சேர்ந்துவிடும் என சிலர் நினைத்தனர். இன்னொரு நன்மையும் விளையலாம் என எதிர்பார்க்கப்பட்டது. தேசிய அரசுகள் முக்கியத்துவம் இழந்து, உலக முதலீட்டிய கட்டமைப்பை ஒரு பேரரசு போல அமெரிக்கா வழி நடத்தும் என்ற ஒரு கணிப்பு உருவானது. இத்தாலிய மார்க்ஸீய தத்துவவாதியான அண்டோனியோ நெக்ரியும், அமெரிக்க பேராசிரியர் ஹார்ட்டும் இணைந்து பேரரசு என்ற நூலை எழுதினார்கள். அவர்கள் கணிப்பில் இந்தப் பேரரசு என்பது ஏகாதிபத்தியமல்ல. முதலீட்டிய கூட்ட மைப்பை நிர்வகிக்கும் அமைப்புதான். ஐக்கிய நாடுகள் சபையே உருமாறி அமெரிக்க நிர்வாகத்தில் இந்தப் பேரரசாக வடிவெடுக்கும் எனக் கூறினார்கள். அப்படி ஒரு பேரரசு உருவானால், உலகெங்கும் தொழிலாளர்கள் புலம்பெயர்ந்து வாழ்வதும் அவர்கள் தேசங்களைக் கடந்த மக்கள் திரளாக ஒன்றுபட்டு பேரரசை தங்கள் வயப்படுத்துவதும் சாத்தியமாகலாம் என்றும் நினைத் தார்கள்.

ஆஃப்கானிஸ்தானில் ரஷ்ய ஆதரவு கம்யூனிசத்தை அகற்ற உருவான மதவாத, தீவிரவாத ராணுவக்குழுக் கள் பலவகையில் உருமாறி தாலிபான், அல்-கொய்தா என வடிவம் எடுத்தன. சௌதி அரேபிய கோடீஸ்வரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒசாமா - பின் - லேடன்



அல்கொய்தா தலைவராக விளங்கினார். இருபத்தோ ராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நியூயார்க் நகரில் தீவிரவாதத் தாக்குதலை நடத்தி உலக வர்த்தக மையம் என்ற இரட்டை கோபுரக் கட்டடங்களைத் தகர்த்தது அல்-கொய்தா. அதற்கு அடைக்கலம் தந்த

(மறுபக்கம் பார்க்க)

# இலங்கைக்கு உதவி: இந்தியாவுக்கு எச்சரிக்கை!

**நிரூபமா ராவ்**
(முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலர்)

**மக்கள் ஆதரவை இழந்துவிட்ட அரசாங்கத்துக்கு முட்டுக்கொடுப்பதாக சாதாரண இலங்கையர்கள் சந்தேகப்படக்கூடிய நிலை குறித்து இந்தியா எச்சரிக்கையாக இருப்பது அவசியம்!**

இந்தியாவே இலங்கையின் ஒரேயொரு அயல்நாடு. இலங்கையில் நடப்பவற்றை இந்தியா அவதானிக்கிறது. குறிப்பாக, இலங்கையின் நிகழ்வுப்போக்குகள் மக்களின் துன்பங்களுடன் தொடர்புடையவையாக இருந்தால் இந்தியா அது குறித்து வேதனை அடைகிறது. அவற்றை தீர்க்க அக்கறைப்படுகிறது. இரு நாடுகளையும் பிணைக்கின்ற உறவுகள் எண்ணற்றவை. அவற்றை இங்கு முழுமையாக விபரிப்பது சாத்தியமில்லை.

இலங்கையர்கள் அவர்கள் சிங்களவர்களாக இருந்தாலென்ன, தமிழர்களாக இருந்தாலென்ன எமது ஒன்றுவிட்ட சகோதரர்களே் எம்மிடமிருந்து பாக்கு நீரிணையால் மாத்திரமே பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். பூகோள அடிப்படையில் நோக்கும்போது, இலங்கையின் அமைவிடம் மிகவும் முக்கியமானதாகும் இந்து சமுத்திரத்தின் பரந்த தென்பிராந்தியத்தின் கப்பல்போக்குவரத்து பாதைகளுக்கு அண்மித்தாக அமைந்திருக்கிறது.

மேலும், தென்னிந்திய தீபகற்பம் இலங்கையில் இருந்து குறுகியதொரு தூரத்திலேயே இருக்கிறது. அதன் காரணத்தினால்தான் இலங்கைத்தீவின் வட பகுதியில் சீன உட்கட்டமைப்புத் திட்டங்கள் பற்றிய எந்தப் பேச்சும் மூலோபாய ரீதியில் இந்தியாவுக்கு கசப்பானதாக இருக்கிறது. இலங்கை பொருளாதாரப் பேராபத்தில் சிக்கி அவசர உதவியை நாடும் நிலைவந்தபோது இந்தியா நேசக்கரத்தை நீட்டியிருக்கிறது. எமது உதவி காலப்பொருத்தமுடையது. அவலத்துக்குள்ளாகியிருக்கும் மக்களுக்கு சில நிவாரணங்களை இந்தியா அனுப்பியிருக்கிறது.

ஆனால், இலங்கையின் அரசியல் நிலைவரம் அத்தகைய முதலுதவித் தீர்வுகளுக்கு ஏற்புடையதாக இல்லை. அரசாங்க உயர்மட்டங்களில் நிலவும் ஊழல், தவறான வழியிலான ஆட்சிமுறையுடன் கூடிய எதேச்சாதிகாரம், தவறான நிதிமுகாமைத்துவம் ஆகியவை காரணமாக இலங்கையின் ஜனநாயகம் அண்மைய வருடங்களில் பலவீனப்படுத்தப்பட்டுவிட்டது. மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்ததற்குப் பின்னரான காலகட் டத்தில் முன்னென்றும் இல்லாத பரந்தளவிலான வேதனையை காணக்கூடியதாக இருக்கிறது. பயங்கரமான உள்நாட்டுப் போரின்போது கூட அரச கட்டமைப்பின் செயற்பாடுகள் இந்தளவுக்கு ஒருபோதும் நிலைகுலைந்ததில்லை.

இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் அந்நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய அனர்த்தங்களின் போது உதவிக்கு விரைந்து ஓடிச்செல்லும் முதல் நாடு என்ற வகையில் இந்தியா குடும்பத்தை கைவிடமுடியாது என்பது வெளிப்படையானது. இலங்கை எமது குடும்பம். நெருக்கடி முகாமைத்துவத்தில் அல்லது இலங்கையர்களின் வேதனையைத் தணிப்பதற்கான தீர்வுகளை வழங்குவதில் ஆற்றலைக் கொண்டிராத சீனர்கள் தங்களுக்கே உரித்தான பிடுங்கல் இராஜதந்திரத்துக்கு அடுத்த பாதை திறப்பதற்காக காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த காலத்தில் சீனர்களுடன் சல்லாபிப்பதற்கு பேர்போன ராஜபக்ஷர்கள் இந்தியாவுக்கு எதிராக சீனர்களை அரவணைக்கும் நடைமுறைகளுடன் கூடிய கொள்கைகள் மற்றும் ஆட்சிமுறையில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொண்டார்களா என்பது கேள்வி. அவர்கள் மக்கள் செல்வாக்கை இழந்துவிட்டார்கள் என்பது வெளிப்படையானது. மக்கள் செல்வாக்கை இழந்துவிட்ட - நியாயத்தன்மை பெருமளவில் வீதிகளில் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற அரசாங்கமொன்றுக்கு முட்டுக்கொடுப்பதாக சாதாரண இலங்கையர்களினால் அடையாளப்படுத்தப்படுவதில் இருந்து இந்தியா எச்சரிக்கையாக நடந்துகொள்ளவேண் டும்.

எதிரணியின் ஐக்கியம் காலத்தின் தேவை. ஆனால், அது ஒரு மாயத்தோற்றமாகவே இருக்கிறது. அடிப்படையில் இலங்கையின் தற்போதைய ஜீவாதார நெருக்கடிக்கான தீர்வுகள் அந்த நாட்டுக்குள்ளேயே காணப்படவேண்டியிருக்கின்றன. உள்நாட்டுப் போருக்குப் பின்னரான காலகட்டத்து நிகழ்வுப்போக்குகள் பிளவுபட்ட அரசியல் சமுதாயத்தையும் தேசத்தையும் ஐக்கியப்படுத்துவதற்குத் தேவையான குணப்படுத்தல்களை கொண்டிருக்கவில்லை. இப்போது பல வருடகாலமாக பெரும்பான்மையினவாத அரசியலே கோலோச்சிக்கொண்டிருக்கிறது. அந்த இனவாதமும் தவறான ஆட்சிமுறை மற்றும் தலைமைத்துவமும் ஒரு காலத்தில் பெரும் ஆற்றல்களைக் கொண்டிருந்த ஒரு நாட்டுக்கு பாரிய சேதத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.

எமது அயல்நாடுகள் பலவற்றின் நிலைவரங்கள் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான - மறைப்பதற்கு அரிதான போட்டியினால் வரையறை செய்யப்படுகின்றன. அதை எமது அயல்நாடுகள் நன்கு பயன்படுத்திக்கொள்கின்றன. அதிகாரப்போட்டியை மனம்போனபோக்கில் ஊக்குவித்து வளர்ப்பதன் மூலமாக தங்களுக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து இந்த அயல்நாடுகள் நிதானமாக சிந்தித்துச் செயற்படுவதாக இல்லை. அந்த விளையாட்டில் ராஜபக்ஷர்கள் மகா கெட்டிக்காரர்கள். ஆனால், அவர்களது அசட்டுத் துணிச்சலும் திறமையின்மையும் சேர்ந்து சரிவைக் கொண்டுவந்திருக்கிறது. இல்லாமையில் இருந்து விடுதலை, பொருளாதார உறுதிப்பாடு, தங்களது அன்றாட வாழ்வில் பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற ஒரு அரசாங்கம் ஆகியவற்றையே மக்கள் அடிப்படையில் விரும்புகிறார்கள் என்பது ராஜபக்ஷர்களின் சரிவில் இருந்து பெறக்கூடிய தெளிவான பாடமாகும்.

தங்களால் தெரிவுசெய்யப்பட்ட தலைவர்களின் பாரதூரமான குறைபாடுகளுக்காக இலங்கையர்கள் பெரிய விலையைச் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களது பிரச்சினைகள் குறுகிய காலத்தில் தணியப் போவதில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் எந்த உதவியும் ஆலோசனையும் கடுமையான நிபந்தனைகளுடனேயே வந்துசேரும். செலவினங்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்.

இந்தியா தொடர்ந்து அதன் உதவிக்கரத்தை நீட்ட வேண்டியிருக்கும். எமது உதவிகள் மக்களின் மனங்களை வென்றெடுப்பதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகளாக இருக்கவேண்டும்.

உள்நாட்டுப்போரின் கசப்பான வருடங்களில் இந்தியா இலங்கையின் இனப்பிளவின் இரு மருங்கிலும் உள்ள மக்களிடமிருந்து தன்னை அந்நியப்படுத்திக் கொண்டது. மிகுந்த நிதானத்துடன் கூடிய மக்கள் இராஜதந்திரத்தின் ஊடாக பழைய குறைபாடுகளுக்கு பரிகாரம் காண்பதற்கு இப்போது ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. கடுமையாக மக்கள் செல்வாக்கை இழந்துவிட்ட தலைமைத்துவத்துக்கு இந்தியா முட்டுக் கொடுக்கின்றது என்ற எந்த எண்ணமும் (தவறானதாக இருந்தாலும் கூட) இலங்கையர்கள் மனதில் ஏற்படுவது சாதுரியமாக தவிர்க்கப்படவேண்டும். இந்தியாவின் இலங்கைக் கொள்கை அமிலப்பரிசோதனையை எதிர்நோக்கிநிற்கிறது. தவறுக்கு இடமிருக்கக்கூடாது ஏனென்றால், சிறிய நாடாக இருந்தாலும் இலங்கை எமது மூலோபாய நலன்களைப் பொறுத்தவரை நாம் தவறிழைக்காமல் செயற்படவேண்டிய அளவுக்கு பெரிய நாடு.

இறுதியில் குடும்பம் குடும்பம்தான். இலங்கையர்கள் எமது குடும்பம்.

---

# மீண்டும் தொடங்கிவிட்டதா...

ஆஃப்கா னிஸ்தானின் தாலிபான் அரசை வீழ்த்த அமெரிக்கா ஆஃப்கானிஸ்தான் மீது படையெடுத்தது. அடுத்து சதாம் ஹூசைனின் ஈராக் பேரழிவு ஆயுதங்களை, ஆந்த்ராக்ஸ் என்னும் ஆட்கொல்லி ரசாயன

துகளை உற்பத்தி செய்வதாக சொல்லி 2004ஆம் ஆண்டு ஈராக் மீது படையெடுத்தது. தீவிரவாதத்துக்கு எதிரான போர் என அறிவித்து இந்த இஸ்லாமிய நாடுகளில் தனது படைகளை நிறுத்தி ஆக்கிரமிப்பு செய்தது. போரில் கைது செய்யப்பட்டவர்களை அமெரிக்க ராணுவத்தினர் குரூர சித்ரவதை செய்து மகிழும் காட்சிகள் வெளியாகி உலகை அதிர்ச்சியுற செய்தது.

**சீனாவின் எழுச்சி**

சோவியத் யூனியன் சிதைவுக்குப் பிறகு உலக நாட்டாமையாக தன்னை அமெரிக்கா கருதிக்கொண்ட சமயத்தில், சீனா பிரம்மாண்டமான பொருளாதார ஆற்றலாக வடிவெடுத்தது. சீனாவில் தயாராகும் பொருட்கள் உலக சந்தைகளை நிரப்பின. மலிவான விலையில் மின்னணு தொழில் நுட்ப சாதனங்களை உற்பத்தி செய்வதில் சீனா அசாதாரணமான சாதனைகளைச் செய்தது. ஏற்கனவே அணு ஆயுத வல்லரசாகவும், மக்கள் தொகையில் உலகின் ஆகப்பெரிய நாடாகவும் விளங்கிய சீனா, பொருளாதார வல்லரசாக மாறியவுடன் அமெரிக்காவின் ஒற்றைத் துருவ உலக கற்பனை முடிவுக்கு வந்தது.

சோவியத் யூனியன் சிதைந்தாலும், அதன் முக்கிய அங்கமான ரஷ்யா ஓர் அணு ஆயுத வல்லரசாகவே தொடர்ந்தது. பொதுவுடமை அமைப்பு சிதைந்த பின்னர், பெருந்தொழிலதிபர்களின் குழு ஒன்று உருவானது. அவர்கள் ஆதரவுடன் அரசு மைய சமூகத்தின் அதிகார குவிமையத்தை விளாடிமீர் புடின் கைப்பற்றினார். மேற்கத்திய மக்களாட்சி வடிவத்தை ரஷ்யாவில் புகுத்திவிட்டால் சுதந்திரவாத - தனியுடமை உலகம் முழுமை பெறும் என்ற அமெரிக்காவின் நோக்கம் புடினின் எழுச்சியாலும், சீனாவின் எழுச்சியாலும் நடைபெறாமல் போனது. சீனாவிலும் பெரு முதலாளிகள் உருவானாலும், அரசு மைய சமூகமாக சீன கம்யூனிஸ்டு கட்சியின் முழுமையான கட்டுப்பாட்டில்தான் நாடு இருக்கிறது.

ரஷ்யாவுக்கு அழுத்தம் தர நேடோ எனப்படும் வடக்கு ஒப்பந்த நாடுகளின் வளையத்தை ரஷ்யாவைச் சுற்றி அமெரிக்கா உருவாக்கியது. இதை புடின் தொடர்ந்து கண்டித்து வந்தார். இறுதியாக ரஷ்யாவுக்கு அடுத்து, சோவியத் யூனியனின் முக்கிய அங்கமாக இருந்த உக்ரைனையும் நேட்டோவில் இணைக்க முயற்சிகள் நடந்தபோது ரஷ்யா, உக்ரைனின் கிரிமியா பகுதியை முதலில் கைப்பற்றியது. தொடர்ந்து முரண்பாடுகளும், மோதல்களும் அதிகரிக்க இரண்டு மாதங்களுக்கு சீனாவின் ஆதரவுடன் உக்ரைனை முழுமையாக ஆக்கிரமிக்கும் நோக்குடன் போர் தொடுத்துவிட்டது.

இப்போது அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் தங்களுக்கு எதிராக அணி திரண்டுவிட்ட சீனா, ரஷ்யா, வடகொரியா கூட்டணியை எப்படி எதிர்கொள்வது என்ற சிக்கலில் இருக்கின்றன. ஒரு துருவ உலக கற்பனைகள், பேரரசு உருவாகுமென்ற கணிப்புகள் எல்லாம் முடிவுக்கு வந்துவிட்டன. இது புதிய பனிப்போரா அல்லது சூடான அமைதியா என்பதெல்லாம் போகப்போகத்தான் தெரியும்.

**சுதந்திர உலகம் என்ற கற்பிதம்**

அமெரிக்கா தேர்தல் நடக்கும் நாடுகளெல்லாம் சுதந்திரவாத சொர்க்க பூமியென்றும், அரசு மைய நாடுகளெல்லாம் உலகை முழுமையாக சுதந்திரவாத உலகாக உருவாக்க தடையாக உள்ளன என்றும் ஒரு கோட்பாட்டை முன்வைக்கிறது. இதில் பெரிய பிரச்சினை என்னவென்றால் சுதந்திரவாத நாடுகளில் நிலவும் கடும் பொருளாதார ஏற்றத்தாழ்வு.


அமெரிக்காவில் கல்வி கற்கவே, கல்வி கட்டணம் செலுத்தவே இரவு விடுதியில் நிர்வாண நடனமாடி பணம் சம்பாதிக்கும் மாணவியின் நேர்காணல் சில ஆண்டுகளுக்கு முன் வெளியானது. இது போன்ற முரண்களை சமாளிக்க தொழிலாளர் அமைப்புகளைப் பல நாடுகளிலும் ஒடுக்க வேண்டியுள்ளது. இந்தியா மக்களாட்சி நாடு என்று பாராட்டிப் பூரிக்கும் ஐரோப்பிய ஒன்றிய அதிபருக்கு, பீமா கொரேகான் வழக்கில் விசாரணையின்றி சிறையில் ஆண்டுக்கணக்கில் அடைக்கப்பட்டுள்ள மனித உரிமை செயற்பாட்டாளர்கள் பற்றி தெரியாதா என்ன? நோம் சாம்ஸ்கி உள்ளிட்ட உலக அறிஞர்களெல்லாம் அவர்களை விடுதலை செய்யச் சொல்லி இந்திய அரசுக்கு விண்ணப்பம் அனுப்பினார்களே? மனித உரிமை செயற்பாட்டாளர்களையே சிறையில் அடைத்துவிட்டு தேர்தலை மட்டும் நடத்தினால் அது சுதந்திரவாத சொர்க்க பூமியா? அமெரிக்காவின் முக்கிய பொருளாதார கூட்டாளியான சவுதி அரேபியாவில் எவ்வாறு மனித உரிமை பேணப்படுகிறது?

இரண்டாம் உலகப் போருக்குப் பின் அதிகமான படையெடுப்புகளையும், ஆக்கிரமிப்புகளையும், மறைமுக ஆட்சிக் கலைப்புகளையும் செய்தது அமெரிக்காதான். உள் நாட்டிலேயே கறுப்பின மக்களுக்கெதிரான இனவெறி தலையெடுத்து ஆடுகிறது. அமெரிக்காவில் மருத்துவக் காப்பீடில்லாமல் வாழவே முடியாது. உயிர்காக்கும் சிகிச்சைகளை கூட தள்ளிப்போட வேண்டிய நிலையில்தான் அமெரிக்கத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று செய்திகள் கூறுகின்றன. ரஷ்யாவிலும், சீனாவிலும் அரசு மைய சமூகமாக இருந்தாலும் மருத்துவ வசதி இலவசமாக அல்லது மலிவாகக் கிடைக்கிறது என்று வைத்துக்கொள்வோம். மக்கள் எதைத் தேர்ந்தெடுப்பார்கள் என்ற கேள்வி எழுகிறது.

எனவே தான் இப்போது உருவாகிவரும் புதிய பனிப்போர் உலகம் இருபதாம் நூற்றாண்டு பனிப்போர் அளவுக்குக்கூட தத்துவார்த்த காரணங்களை காட்ட முடியாது. அமெரிக்க - ஐரோப்பிய நாடுகளின் ஒற்றைத் துருவ உலகா அல்லது அதிகாரப் பரவலைச் சாத்தியமாக்கும் பல்வேறு அதிகார மையங்களை கொண்ட கூட்டாட்சி உலகா என்பதுதான் கேள்வியோ என்றும் தோன்றுகிறது. ரஷ்யா - உக்ரைன் போர் என்பது உலகின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் ஒரு திருப்பம் என்பதில் ஐயமில்லை. ●

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**08.** 


கீழுள்ள முக்கோண வடிவில் பக்கமொன்றின் எண்கள் மூன்றை கூட்டும் போது 18 வரக்கூடியதாக 4, 6, 10, 12 ஆகிய எண்களினால் வெற்றுக் கூடுகளை நிரப்புக.

(1) A - 12, B - 14, C - 4, D - 8
(2) A - 10, B - 12, C - 4, D - 6
(3) A - 10, B - 12, C - 6, D - 4

- **பின்வரும் கவிதையை வாசித்து 09, 10 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிக.**

தேசம் நமது தெய்வம் - இதைத்
தெரிந்து கொள்ளும் தம்பி
பாசம் எல்லாம் கொட்டி - அதைப்
பாதுகாக்க வேண்டும்

பாட்டன், பாட்டி வாழ்ந்த - எங்கள்
பரம்பரைகள் வாழ்ந்த
நாட்டை வணங்க வேண்டும் - அதன்
நாமம் போற்ற வேண்டும்.

**09.** இக்கவிதை புலப்படுத்துகின்ற பிரதான கருத்து யாது?

(1) கடவுள் பக்தி (2) நாட்டுப் பற்று (3) பரம்பரைப் பற்று


**10.** இக்கவிதையில் வரும் **தேசம், பாசம், நாமம்** ஆகிய சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய சொற்கள் முறையே

(1) பூமி, வாஞ்சை, திருமுகம்
(2) நாடு, விருப்பம், திலகம்
(3) நாடு, நேயம், பெயர்

**11.** அருகருகே அமைந்துள்ள மூன்று முழு எண்களின் கூட்டுத் தொகை 126 ஆகம். எனின் அவ் மூன்று எண்களுள் மிகப் பெரிய எண் யாது?

(1) 41 (2) 42 (3) 43

**12.** ஆறு பக்கங்களில் **A, B, C, D, E, F** எழுத்துக்கள் ஓர் எழுத்து என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ள தாயக்கட்டையொன்றின் மூன்று அமைவுகள் கீழே தரப்பட்டுள்ளன.




அவ் தாயக்கட்டையில் **D** என்ற எழுத்து குறிக்கப்பட்ட பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்திலே உள்ள எழுத்து எது?

(1) A (2) B (3) E

**13.** தரப்பட்ட கூற்றை அடிப்படையாகக் கொண்டு தவறான விடையைத் தெரிவு செய்க.

**சுமதியின் வகுப்பில் உள்ள அனைவரும் பாட்டுப் பாடுவார்கள். அவர்களுள் பரதன் நன்றாகப் பாடும் திறமையைக் கொண்டிருந்தான்.**

(1) சுமதியை விட பரதன் நன்றாகப் பாட்டுப் பாடுவான்.
(2) பரதன் சுமதியின் வகுப்பில் கல்வி கற்கின்றான்.
(3) பரதனின் வகுப்பில் உள்ள அனைவரும் ஆண்கள் ஆவர்.

**14.** வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய விடையைத் தெரிக.

| | | | |
|---|---|---|---|
| H | G | F | E |
| P | | | M |
| I | | | L |
| A | B | C | D |

(1)


| | |
|---|---|
| N | O |
| K | J |

(2)

| | |
|---|---|
| O | N |
| J | K |

(3)

| | |
|---|---|
| N | O |
| J | K |

**15.** 


கடிகாரம் X முற்பகல் நேரத்தையும் கடிகாரம் Y பிற்பகல் நேரத்தையும் காட்டுகின்றது. எனின் இரு கடிகாரமும் காட்டும் நேரத்தின் வித்தியாசம் யாது?

(1) 3 மணித்தியாலம் 40 நிமிடங்கள்
(2) 15 மணித்தியாலம் 40 நிமிடங்கள்
(3) 12 மணித்தியாலம் 10 நிமிடங்கள்

## விடைகள்

| | | |
|---|---|---|
| 08. | (3) | A - 10, B - 12, C - 6, D - 4 |
| 09. | (2) | நாட்டுப் பற்று |
| 10. | (3) | நாடு, நேயம், பெயர் |
| 11. | (3) | 43 |
| 12. | (1) | A |
| 13. | (3) | பரதனின் வகுப்பில் உள்ள அனைவரும் ஆண்கள் ஆவர். |
| 14. | (2) | O N / J K |
| 15. | (2) | 15 மணித்தியாலம் 40 நிமிடங்கள் |

## கல்வி tv CHANNEL-1

**07.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**07.05.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |





## கல்முனை அஷ்ரப் வைத்தியசாலை முன்பாக சுகாதார சேவை தொழிற்சங்கம் போராட்டம்!

கல்முனை, மே 07

அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று வெள்ளிக் கிழமை நாடளாவிய ரீதியில், ஹர்த்தால் முன்னெடுக்கப் பட்டது.

இதன் ஒரு அங்கமாக கல் முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை ஒன்றிணைந்த சுகாதார சேவைகள் தொழிற்சங் கத்தினால் வைத்தியசாலைக்கு முன்றலில் நேற்றுக் காலை ஆர்ப் பாட்டம் ஒன்று நடைபெற்றது.

இந்த ஆர்பாட்டத்தின் போது அரசுக்கு எதிரான பல் வேறு கோஷங்களை எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள், பொறுப்பு தோல்வியடைந்த அரசாங்கத்தையும் சீரழிந்த அரசியல் அமைப்பையும் முடி வுக்குக் கொண்டு வந்து நல்ல அரசியல் கலாசாரத்தையும் ஜனநாயகத்தையும் பேணிக் காக்க உண்மையான தேசப் பற்று வேலைத்திட்டத்தை உருவாக்குவதே மக்கள் போராட்டத்தின் நோக்கமா கும். அங்கு பின்வரும் விடயங் களுக்கு ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் சட்ட ரீதியான தீர்வுகள் காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்.

01. தேசிய பாதுகாப்பு மற் றும் இறையாண்மையை உறுதி செய்தல் மற்றும் நாட்டில் அனைவருக்கும் சட்டத்தின் ஆட்சி சமமாக பொருந்தும் சூழலை உருவாக்குதல் .

02. அனைத்து மக்களின் வாழ்வுரிமையை உறுதி செய்தல்

03. மக்கள் பிரதிநிதிகள் நியமனத்திற்கு தேவையான குறைந்தபட்ச தகுதிகளுடன் , குறைந்தபட்ச தரத்தை வெளியிடுதல்

04. மக்கள் பிரதிநிதிகளின் சிறப்புச் சலுகைகளை இழந்து அவர்களை பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புக்கூறல் பொறிமுறைக்கு உட்படுத்துதல்

05. மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் அரசியலில் ஈடுபடும் உறுப்பி னர்களை தொடர்ச்சியான கணக்காய்வுக்கு உட்படுத்தல்

06. அமைச்சரவை உட்பட அனைத்து மக்கள் பிரதிநிதிக ளின் செயல்திறனை மதிப்பிடு வதற்கு முறையான வழிமுறையை அறிமுகப்படுத்துதல்.

07. தேவையான அளவுக்கு தங்களுக்கு வழங்கிய பொறுப் புக்களை வினைத்திறனுடன் ஆற்ற முடியாதவர்களை அல் லது ஊழல்மிக்க அரசியல்வாதி களை அகற்றி , அதனால் ஏற்ப டும் சேதத்தை ஈடுசெய்ய ஒரு குறிப்பிட்ட கொள்கையை வகுக்க வேண்டும் .

08. அரசியல் தலையீட்டு டன் பொருளாதாரம் உட்பட நாட்டின் துறைகளுக்கும் நிலை யான தேசியக் கொள்கைகளை உருவாக்குதல் .

09. அரசியல் தலையீடு இல்லாமல் பொது நிறுவனங்க ளை பராமரித்தல் மற்றும் அனைத்து அரசு அதிகாரிகளும் சுதந்திரமாக நியமிக்கப்படும் முறையை உறுதி செய்தல்.

10. உள்ளூர் தொழில்முனை வோருக்கு முன்னுரிமை அளித் தல் .

11. அமைதியான போராட் டம் மற்றும் கருத்து வெளிப்ப டுத்தும் உரிமை உட்பட அடிப் படை ஜனநாயக உரிமைகளை உறுதி செய்தல் .

12. இலவசக் கல்வி மற்றும் இலவச சுகாதாரம் , பாதுகாப்பு போன்ற சேவைகள் மற்றும் பொது வளங்களைப் பாதுகாத் தல்-போன்ற விடயங்களை போராட்டக்காரர்கள் வலி யுறுத்தினர். (அ)

# பொலிஸார்-பொதுமக்கள் அக்கரைப்பற்றில் மோதல்!

## பொலிஸார் 11 பேர் உட்பட 16 பேர் வைத்தியசாலையில்

அம்பாறை, மே 07

**அம்பாறை மாவட்டம் - அக்கரைப்பற்று பகுதியில் நேற்றுமுன் தினம் இரவு இடம்பெற்ற விபத்தொன்றை அடுத்து பொலிஸாருக் கும் பிரதேசவாசிகளுக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலை மோதலாக மாறி பொலிஸாரால் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.**

மோதலை அடுத்து அந்தப் பகுதியில் பதற்ற நிலை நீடித்து வரும் நிலையில் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டுள் ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மோதலில் அக் கரைப்பற்று பொலிஸ் பொறுப் பதிகாரி உட்பட ஆறு பொலி ஸார் மற்றும் மூன்று சிவில் பாதுகாப்புப் படை அதிகாரி கள் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட் டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று காலை வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் இரவு அக்கரைப்பற்று பாலமுனை வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள வீதித் தடுப்பில் கடமை யாற்றிய உத்தியோகத்தர்கள் பாதுகாப்பற்ற முறையில் வேக மாகச் சென்ற மோட்டார் சைக் கிளை நிறுத்துமாறு சமிக்ஞை செய்தனர். அப்போது, மோட் டார் சைக்கிளில் சென்றவர்கள் வீதியில் விழுந்து படுகாயம் அடைந்தார் என பொலிஸார் கூறுகின்றனர்.

இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்த அப்பகுதியை சேர்ந்த 700-க்கும் மேற்பட்டோர் வீதி மறியலில் ஈடுபட்டதுடன், அதிகாரிகளை தாக்கி பாதுகாப் புச் சாவடிக்கும் தீ வைத்தனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதலில் அக்கரைப்பற்று பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட 07 பொலிஸ் உத்தி யோகத்தர்கள் மற்றும் 3 சிவில் பாதுகாப்புப் படையினர் காய மடைந்து சிகிச்சைக்காக அக் கரைப்பற்று மற்றும் அம்பாறை வைத்தியசாலைகளில் அனும திக்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.

இதையடுத்து நிலைமையை கட்டுப்படுத்த பொலிஸ் உத்தி யோகத்தர் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்றும் அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







மோட்டார் சைக்கிள் விபத் தில் காயமடைந்த நபர்கள் சிகிச்சைக்காக வைத்திய சாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். காயமடைந்தவர் களின் நிலைமை கவலைக் கிடமாக இல்லை பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் குறித்து சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலின்பே ரில் பொத்துவில் பொலிஸ் அத் தியட்சகரினால் மேலதிக விசா ரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இதேவேளை, அம்பாறை பொலிஸ் நிலையப் பொறுப்ப திகாரி உட்பட பொலிஸார் 11 பேர் உட்பட 16 பேர் காய மடைந்த நிலையில் அக்கரைப் பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



## கல்முனை ஸ்தம்பித்தது!

கல்முனை, மே. 07

அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று நாடளாவிய ரீதியில், ஹர்த்தால் முன்னெடுக் கப்பட்டது.

தேசிய ரீதியாக முன்னெடுக்கப்பட்ட ஹர்த்தால் நடவடிக்கையில் கல்முனை சந்தை முழுமையாக செயலிழந்து வெறிச்சோடிக் காணப்பட்டது. கல் முனையில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு ஹர்த் தாலுக்கு முழுமையான ஆதரவு வழங்கப்பட்டது. (அ)



# ஆப்கானில் வெள்ளம் 22 பேர் உயிரிழந்தனர்!

காபூல், மே 07

ஆப்கானிஸ்தானில் கொட்டித் தீர்த்த கனமழை மற்றும் வெள்ளத்தால் 22 பேர் உயிரிழந்தனர்.

காபூல், பார்வான் உள்ளிட்ட 10 மாகாணங்களில் இடைவிடாது கொட்டித்தீர்த்த மழையால் பல்வேறு பகுதிகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வெள்ளப் பெருக்கால் நூற்றுக்கணக்கான வீடுகள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன. இருவர் மாயமான நிலையில் 40 பேர் காயமடைந்தனர் என்று ஆப்கானிஸ்தானின் தேசிய அனர்த்த நிலையம் தகவல் வெளியிட்டுள்ளது.

அதில், 500 வீடுகள் அழிந்தன, 2,000 வீடுகள் சேதமடைந்தன, 300 கால்நடைகள் கொல்லப்பட்டன, 3,000 ஏக்கர் பயிர்கள் சேதமடைந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உலக மக்களின் நலன்களுக்காக ரஷ்யா போரை நிறுத்தவேண்டும்!

## ஐ. நா. பொதுச் செயலர் பாதுகாப்பு சபையில் வலியுறுத்து

நியூயோர்க், மே 07

உலக மக்களின் நலனுக்காக ரஷ்யா உடனடியாக உக்ரைனுடனான போரை நிறுத்த வேண்டும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்ரெரஸ் வலியுறுத்தியுள்ளார்.

உக்ரைன்மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி போர் தொடுத்தது. இதன் விளைவாக உலகம் முழுவதும் எரிபொருள் விலையேற்றம், சமையல் எண்ணெய் தட்டுப்பாடு, கோதுமை தட்டுப்பாடு இன்னும் பிற வர்த்தக, பொருளாதார சிக்கல்கள் உருவாகியுள்ளன. ரஷ்யாவிடம் கோதுமை இறக்குமதியை நம்பியிருந்த ஏற்கெனவே வறுமையில் வாடும் எதியோப்பியா உள்ளிட்ட ஆபிரிக்க நாடுகள் பெரும் சிக்கல்களில் உள்ளன.

இரண்டு மாதங்கள் முடிந்துவிட்ட நிலையில் ரஷ்யா, உக்ரைன் இடையேயான பேச்சு முற்றிலுமாக முடங்கியுள்ளது. உணவுப் பொருள், எரிபொருள் என உக்ரைன் - ரஷ்ய போர் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் கடந்த வியாழனன்று ஐ. நா. பாதுகாப்பு சபை கூட்டம் கூடியது. அதில் பேசிய, பொதுச் செயலாளர், ”உலக மக்களின் நலனுக்காக ரஷ்யா உடனடியாக உக்ரைனுடனான போரை நிறுத்த வேண்டும். ரஷ்யாவின் படையெடுப்பு ஐ. நா. சாசனத்தின்படி



உக்ரைனின் பிராந்திய ஒருமைப்பாடுக்கு எதிரானது. உக்ரைன், ரஷ்யா மக்களுக்காக மட்டுமல்ல ஒட்டுமொத்த உலக மக்களுக்காகவும் இந்தப் போர் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும்” என்றார்.

இதன்போது ஐ. நா. பாதுகாப்பு சபையின் உறுப்பு நாடுகளான சீனா, அமெரிக்கா, அயர்லாந்து, பிரான்ஸ், மெக்சிகோ ஆகிய நாடுகள் போரை முடிவுக்குக் கொண்டுவர வலியுறுத்தின.

# சீன உய்குர் முஸ்லிம்களை பாதுகாக்க கனடா, அமெரிக்கா, பிரிட்டன் திட்டம்!

ஒன்ராறியோ, மே 07

சீனாவின் சின்ஜியாங் மாகாணத்தில் வன்முறைகளிலிருந்து தப்பி வரும் உய்குர் இன மக்கள் மற்றும் பிற இன சிறுபான்மையினருக்கு உதவும் வகையில் கனடிய பாராளுமன்றக் குழுவால் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் கனடிய குடியேற்றம் மற்றும் குடியுரிமைக்கான நிலைக் குழுவினரின் கவனம் தற்போது உய்குர் மக்களின் மீது திரும்பியுள்ளது.

தடுத்து வைக்கப்பட்ட மற்றும் நாடு கடத்தப்படும் அபாயத்தை எதிர்கொள்ளும் இடம் பெயர்ந்த சீனாவின் உய்குர் மக்களை கனடாவில் தஞ்சமடைய அனுமதிக்கும் விதத்தில் அவர்கள் முக்கிய தீர்மானங்களை எடுத்துள்ளனர்.

இதில் கடவுச்சீட்டு இல்லாதவர்களுக்கு தற்காலிக குடியுரிமை அனுமதி மற்றும் ஒற்றை பயண ஆவணங்கள் வழங்குதல் ஆகியவை அடங்குகின்றன. சீனாவில் உள்ள உய்குர் மற்றும் பிற துருக்கிய முஸ்லிம்களின் இனப் படுகொலை குறித்து கண்டிப்பதாகவும் கனடா அரசு தெரிவித்துள்ளது.

சீன கம்யூனிஸ்ட் கட்சி அதன் எல்லைகளுக்கு அப்பால் தனது செல்வாக்கை நீட்டிக்க முயற்சிக்கும் ஒரு சூழ்நிலையே இதுபோன்ற இன வன்முறைகளுக்கு பிரதான காரணமாகும்.

எனவே, உய்குர்களை குறிவைக்கும் சீனாவின் கொள்கைகளை “இனப்படுகொலை” என்றும் “மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள்” என்றும் மேற்குலக சட்டமன்றங்களுடன் இணைந்து கனடா பாராளுமன்றம் முன்னதாக அறிவித்திருந்தது. இதனையே தற்போது அமெரிக்க அரசும் அறிவித்துள்ளது.

இதன் விளைவாக, ஐக்கிய இராச்சியத்தில் உள்ள சட்ட வல்லுநர்கள் மேற்கு சீன பிராந்தியத்தின் மருத்துவ இறக்குமதியை தடை செய்வது குறித்தும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், கனடாவுக்கு வர விரும்பும் உக்ரைனியர்களுக்கு அவசர பயணத்துக்கான கனடா - உக்ரைன் அங்கீகாரம் உட்பட புதிய குடியேற்றக் கொள்கைகளை அறிமுகப்படுத்துவதாக கனடா அரசு தெரிவித்துள்ளதுடன், குறித்த கனடிய பாராளுமன்றக் குழுவானது உக்ரேனிய அகதிகளுக்கு சிறப்பு குடியேற்ற நடைமுறைகளை வழங்குவதற்கான ஒரு பிரேரணையையும் முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# போரில் இரு கால்களையும் இழந்த காதலியை கைபிடித்த காதலன்!

## நடன காணொலிக்கு பெரும் வரவேற்பு

கீவ், மே 07

ரஷ்யாவின் கண்ணிவெடியில் சிக்கி இரு கால்களையும் இழந்த காதலியை மருத்துவமனையில் வைத்தே திருமணம் செய்தார் உக்ரைன் இளைஞர் ஒருவர்.

அவரின் இந்தச் செயலுக்கு அங்கு நின்ற மருத்துவர்கள், தாதியர்கள், நோயாளர்கள் மற்றும் பார்வையாளர்கள் கர கோஷங்களை எழுப்பி வரவேற்பு அளித்ததுடன் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

உக்ரைன்மீது ரஷ்யா தொடுத்த போர், இரு மாதங்களை கடந்து நீண்டு வருகிறது.

இந்நிலையில், உக்ரைனின் லிசிசான்ஸ்க் பகுதியை சேர்ந்தவர் ஒக்சானா (வயது 23). இவர் அங்குள்ள ஒரு மருத்துவமனையில் தாதியாக பணிபுரிந்து வருகிறார். இவரை விக்ரர் என்பவரை காதலித்து வந்துள்ளார்.

கடந்த மாதம் இருவரும் ஒரு வீதியில் நடந்து சென்றபோது ரஷ்யாவின் கண்ணிவெடியில் சிக்கி ஒக்சானா இரு கால்களையும் ஒரு கையின் நான்கு விரல்களையும் இழந்தார். இதன்போது, விக்ரர் அதிர்ஷ்டவசமாக எந்தக் காயமுமின்றி தப்பினார்.

இவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், விக்ரர் ஒக்சானவை திருமணம் செய்ய முடிவு எடுத்தார். கால்களை இழந்து தவிக்கும் காதலிக்கு இது ஆறுதலையும் - மகிழ்ச்சியையும் அளிக்கும் என்பது அவரின் முடிவாக இருந்தது.

இதை அவர் ஒக்சானவிடம் கூறி சம்மதம் பெற்ற நிலையில், அவருக்கு சிகிச்சையளித்த மருத்துவமனையிலேயே இருவரும் மோதிரம் மாற்றித் திருமண பந்தத்தில் இணைந்தனர். இதன் பின்னர், விக்ரர் ஒக்சானவை கைகளில் ஏந்தி நடனமாடினார். இவர்களை அங்கிருந்த அனைவரும் கைதட்டி உற்சாகப்படுத்தியதுடன், வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

இவர்களின் நடன காணொலி பார்ப்போரின் நெஞ்சை உருக்குகிறது. இந்தக் காணொலி உக்ரைன் அரசுக்கு சொந்தமான ருவிட்டர் பக்கத்தில் வெளியாகி உலகம் முழுவதும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

(ஐ)

# வேற்றுக்கிரக வாசிகளை ஈர்க்க மனிதர்களின் நிர்வாண படங்கள்!

## நாஸாவின் புதிய திட்டம் ஆரம்பம்

நியூயோர்க், மே 07

வேற்றுகிரகவாசிகள் உடன் தொடர்பை ஏற்படுத்த நாஸா மனிதர்களின் நிர்வாண படங் களை அனுப்பும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

பூமியை தவிர்த்து வேறு கிரகங்களில் உயிர்கள் இருக் கின்றனவா என்பது இன்று வரை மர்மமாகவே இருக்கிறது. இது தொடர்பில் பல வருடங்கள் ஆராய்ச்சி நடக்கிறது.

இந்த ஆராய்ச்சியின் ஒரு திட்டமாக நாஸா விண்வெளி நிறுவனம் “பீகன் இன் தி கேலக்சி“ என்ற திட்டத்தை கையில் எடுத்துள்ளது. வேற்றுக்கிரகவாசிகள் உடன்





**Figure 3.8:** Pictural representation of humans and double helix in the Message, Page 8.

தொடர்பை ஏற்படுத்துவதே இதன் நோக்கம. தற்போது இந்த திட்டத்தின் ஒரு பகுதியாக ஆண் மற்றும் பெண் மனிதர்களின் நிர்வாண படங்களை விண்வெளியில் ஒளிரச் செய்து வேற்றுக் கிரகவாசிகளை கவரும் முயற்சியில் நாஸா ஈடுபடவுள்ளது.

கணிதத்தில் உள்ள பைனரி குறியீடுகள் உடன் இந்த புகைப் படங்களை நாஸா வடிவமைத்துள்ளது. இந்த குறியீடுகள் வேற்றுக் கிரகவாசிகளுக்கு புரியும் என விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

ஈழநாடு






# டில்லியிடம் மண்டியிட்டது சன்ரைசர்ஸ் ஹைதராபாத்

மும்பை, மே 07

டில்லி கப்பிட்டல்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 21 ஓட்டங்களால் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி தோல்வியை தழுவியுள்ளது.

208 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை துரத்திய சன்ரைசர்ஸ் அணிக்கு இரண்டாவது ஓவரே அதிர்ச்சி கொடுத்தார் கலீல் அகமது. அவரின் பந்தில் சிக்ஸர் அடிக்க முயன்று பிடியெடுப்பாகி ஆட்டமிழந்தார் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அபிஷேக் சர்மா. மற்றோர் ஆரம்ப வீரர் கேன் வில்லியம்சன் 4 ஓட்டங்களோடு நடையை கட்டினார்.

இதன்பின் ராகுல் திரிபாதி மற்றும் அய்டன் மார்க்ரம் இணைப்பாட்டம் ஒன்றை ஏற்படுத்த முயன்றனர். ஆனால், மிட்சேல் மார்ஷ் 22 ஓட்டங்களை எடுத்திருந்த திரிபாதியை ஆட்டமிழக்க, சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த மார்க்ரமை குல்தீப் யாதவ் வெளியேற்றினார். மார்க்ரம் 42 ஓட்டங்களுக்கு அரங்கம் திரும்பினார்.

இதன்பின்னே விக்கெட் காப்பாளர் நிகோலஸ் பூரண் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆனால், அவருக்கு பக்கபலமாக இருக்க பின்வரிசை வீரர்கள் தவறினர். பூரண் 62 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் சன்ரைசர்ஸ் அணி 8 விக்கெட் இழப்புக்கு 186 ஓட்டங்கள் மட்டுமே சேர்த்தது.

இதனால் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டில்லி அணி வெற்றிபெற்றது.

டில்லி அணியின் பந்துவீச்சில் கலீல் அகமது 3 விக்கெட்களும், ஷர்துல் தாகூர் இரண்டு விக்கெட் களும் வீழ்த்தினர்.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் களத்தடுப்பைத் தெரிவு செய்தார். டில்லி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணியின் தொடக்க வீரர் மந்தீப் சிங் முதல் ஓவரில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் வெளியேறினார். மிற்செல் மார்ஷ் 10 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த அணித் தலைவர் ரிஷப் பந்த், வோர்ணருடன் இணைந்து 48 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார். பந்த் 26 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

ரோவ்மேன் பவல் களத்துக்கு வந்தார். இருவரும் துடுப்பாட்டத்தில் அதிரடி காட்டினர். பவல் 35 பந்துகளில் 67 ஓட்டங்கள் விளாசினார். வோர்ணர் 58 பந்துகளில் 92 ஓட்டங்கள் சேர்த்திருந்தார். இருவரும் இறுதிவரை ஆட்டமிழக்கவில்லை. 20 ஓவர்கள் முடிவில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 207 ஓட்டங்களை குவித்தது டில்லி.

ஹைதராபாத் அணிக்காக புவனேஷ்வர் குமார், அபொட் மற்றும் ஷ்ரேயஸ் கோபால் தலா ஒரு விக்கெட் கைப்பற்றி இருந்தனர்.

இந்தப் போட்டியில் டில்லி அணி விளையாடும் பதினொருவர் அணியில் 4 மாற்றங்களை செய்திருந்தது. ஹைதராபாத் அணி 3 மாற்றங்களை செய்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# துடுப்பாட்டமே கைவிட்டது!

## சென்னையின் டோனி

புனே, மே 07

ஐ. பி. எல். தொடரில் புதன்கிழமை பெங்களூர் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது சென்னை அணி. போட்டி முடிவடைந்ததும் சென்னை அணியின் அணித் தலைவர் டோனி கூறும்போது,

“பெங்களூர் அணியை 173 ஓட்டங்களுக்குள் சிறப்பாகவே கட்டுப்படுத்தினோம். ஆட்டத்தின் பிற்பாதியில் ஆடுகளத்தின் மேற்பரப்பு சிறப்பாக இருக்கும் என்றே உணர்ந்தேன். ஆனால் துடுப்பாட்டத் திறன் எங்களை வீழ்த்திவிட்டது.

இலக்கை துரத்தும்போது என்ன தேவை என்று துடுப்பாட்ட வீரர்களுக்கு தெரியும், சில சமயங்களில் உள்ளுணர்வைக் கட்டுப்படுத்தி, உங்கள் ஷொட்களை விளையாடுவதற்குப் பதிலாக நிலைமை என்ன கோருகிறது என்பதைப் பார்க்க வேண்டும். எங்களிடம் நல்ல தொடக்கம் இருந்தது, கைவசம் விக்கெட்கள் இருந்தன, ஆடுகளத்தின் மேற்பரப்பும் சிறப்பாக இருந்தது. ஆனால், சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்தோம்.

இலக்கை துரத்துவது என்பது கணக்கீடுகளைப் பற்றியது. அதேவளையில் முதலில் துடுப்பாட்டம் செய்வது அதிக அளவிலான உள்ளுணர்வைப் பற்றியது. களத்தில் இருக்கும் வீரரே முடிவு செய்ய வேண்டும். உங்களிடம் எத்தனை புள்ளிகள் உள்ளன என்பது குறித்து சிந்தித்தால் கவனம் எளிதாக சிதறும். புள்ளிகள் அட்டவணையில் நீங்கள் எந்த இடத்தில் இருக்கிறீர்கள் என்பதை விட செயல்முறையே முக்கியம்” என்றார்.




# அதிக அரைச்சதங்கள் வோர்ணர் புதிய சாதனை




மும்பை, மே 07

இருபது - 20 போட்டிகளில் அதிக அரைச்சதங்கள் அடித்தவர் என்ற சாதனையை டில்லி அணியின் டேவிட் வோர்ணர் படைத்துள்ளார்.

ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் மும்பையில் நடந்த போட்டியில் நேற்றுமுன்தினம் டில்லி கப்பிட்டல்ஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் டில்லி அணிக்காகக் களமிறங்கிய டேவிட் வோர்ணர் அரைச்சதம் அடித்தார். இது அவரின் 89ஆவது அரைச்சதமாகும்.

இதன்மூலம், இருபது - 20 போட்டிகளில் அதிக அரைச்சதங்கள் அடித்தவர் என்ற புதிய சாதனை படைத்தார்.

இவருக்கு அடுத்த இடத்தில் கிறிஸ் கெயில் 88 அரைச்சதங்கள், விராட் கோலி 77 அரைச்சதங்களை அடித்துள்ளனர்.

# அதிரடியான மீள் எழுச்சியால் ரியல் மட்ரிட் இறுதிக்கு தகுதி!

மட்ரிட், மே 07

சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்ட போட்டியின் 2ஆவது அரையிறுதியில் மன்செஸ்டர் சிற்றிக்கு எதிராக ‘த்ரில்’ வெற்றியை பதிவு செய்து, இறுதி ஆட்டத்துக்கு நுழைந்தது ரியல் மட்ரிட் அணி.

அரையிறுதியின் முதல் பகுதி ஆட்டத்தில் தோல்வியை சந்தித்திருந்தது. இந்நிலையில் இரண்டாவது பாதியிலும் தோல்வியடையும் நிலைக்கு சென்றபோதும் அதிரடியாக மீண்டெழுந்து வெற்றி பெற்றது.

மட்ரிட் நகரில் நடைபெற்ற இந்தப் போட்டியில், முதலில் மன்செஸ்டர் சிற்றிக்காக ரியாத் மெஹரெஸ் (73’) கோலடித்தார். ஆட்டத்தின் இறுதி நிமிடம் நெருங்கியும் ரியல் மட்ரிட்டால் கோலடிக்க முடியாத நிலையே இருந்தது.

முதல் பகுதி ஆட்டத்திலேயே 4-3 என்ற கோல் கணக்கில் வென்றிருந்த மன்செஸ்டர் சிற்றி, இந்த ஆட்டத்திலும் ஒரு கோல் அடித்து தனது முன்னிலையை மேலும் உறுதிப்படுத்தியிருந்தது. இதனால், ரியல் மட்ரிட் ரசிகர்களும், களத்திலிருந்த வீரர்கள் சிலரும்கூட நம்பிக்கை இழந்தனர்.

இந்நிலையில் மேலதிக வீரராகக் களமிறங்கியிருந்த ரொட்ரிகோ 90-ஆவது நிமிடத்தில் கோலடித்து, சற்றும் எதிர்பாராத வகையில் ஆட்டத்தின் போக்கை திசை திருப்பினார். மேலதிக நேரத்தின் முதல் நிமிடத்திலும் ரொட்ரிகோ மீண்டும் கோலடிக்க, ரியல் மட்ரிட் வசமானது ஆட்டம்.

எஞ்சிய நேரத்தில் முழு ஆற்றலைக் கொண்டு முயற்சித்த அந்த அணிக்கு 95ஆவது நிமிடத்தில் பெனால்டி கிக் வாய்ப்பு கிடைத்தது. அதை சரியாகப் பயன்படுத்தி கோலடித்தார் கரிம் பென்ஸிமா. இதனால் 3-1 என வென்ற ரியல் மட்ரிட், மொத்த கோல் கணக்கீட்டு அடிப்படையில் 6-5 என்ற கோல் கணக்கின் முன்னிலையுடன் இறுதி ஆட்டத்துக்குள் நுழைந்தது.




இதற்கு முன் 2018 இறுதி ஆட்டத்தில் லிவர்பூல் அணியை வீழ்த்தி 13ஆவது முறையாக சம்பியன் கிண்ணத்தை வென்றிருந்தது ரியல் மாட்ரிட். தற்போது அதற்கு பதிலடி தரும் முனைப்பில் இருக்கிறது லிவர்பூல்.

# ஹொரு கோ கமவின் தலைவர் சபாநாயகரே!

## சபையில் கூறியது எதிர்க்கட்சி

**கொழும்பு, மே 07**

**பாராளுமன்றத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள "ஹொரு கோ கம" ( திருடர் போ கிராமம்) வின் தலைவர் சபாநாயகர் என்று பாராளுமன்றில் தெரிவிக்கப்பட்டது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே இந்த கருத்தை வெளிப்படுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றம் நாளாந்தம் கூடுகின்றபோதும் மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணப்படவில்லை. காலி முகத்திடலில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு அது தொடர்கிறது.

அத்துடன் பாராளுமன்றுக்கு அருகில் அனைத்து பல்கலைக்கழக மாணவர்களால் ஹொரு கோ கம என்ற கிராமம் அமைக்கப்பட்டுள்ளது.

இது பாராளுமன்றில் உள்ளவர்கள் அனைவருக்கும் எதிராக அமைக்கப்பட்டுள்ள கிராமமாகும்.

இந்நிலையில் வெட்கத்துடன் அல்லது விருப்பத்துடனோ ஹொரு கோ கமவின் தலைவராக சபாநாயகர் இருக்கிறார்-என்றார். (அ)





## வவுனியா மூன்றுமுறிப்புப் பகுதியில் அரசை எதிர்த்து மக்கள் போராட்டம்!

வவுனியா, மே 07

அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று வவுனியா மூன்றுமுறிப்பில் இடம்பெற்றது.

வவுனியா மூன்றுமுறிப்பு கிராம மக்களின் ஏற்பாட்டில் ஏ-9 வீதியின் ஒருவழிப் பாதையை மறித்து குறித்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதன்போது விடுதலைப்புலிகளின் டொலர் எங்கே, எங்கள் பணத்தை எங்களுக்கு தாருங்கள், நாங்கள் கேட்பது சாப்பிடுவதற்கு ஆனால் கிடைப்பது உங்களுக்கு, கோ கோம் கோட்டா போன்ற பதாதைகளை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

## பிரதிச் சபாநாயகர் நிலைக்கு அரச வேட்பாளர் போட்டியிட்டிருந்தால் தோல்வியடைந்திருப்பார்!

### சுசில் பிரேமஜயந்த தகவல்

கொழும்பு, மே 07

பாராளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பிரதி சபாநாயகருக்கான வாக்கெடுப்பின்போது அரசாங்கம் வேட்பாளர் ஒருவரை அறிவித்திருந்தால், அந்த வேட்பாளருக்கு 95 பேர் மாத்திரமே ஆதரவளித்திருப்பர் என்று பாராளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

எதிர்கட்சிகளுக்கு 100க்கு அதிகமான வாக்குகள் கிடைத்திருக்கும். இதனை கருத்திற் கொண்டே அரசாங்க கட்சி, எதிர்கட்சியினால் முன்மொழியப்பட்ட வேட்பாளரை ஆதரிப்பதாக கூறியது என்று சுசில் பிரேமஜயந்த நேற்று பாராளுமன்றில் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வாக்கெடுப்பின்போது, எதிர்கட்சிகளுக்கு மத்தியில் தொடர்பாடல் பிரச்னை இருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சியினால் முன்மொழியப்பட்ட ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவுக்கு அரசாங்கம் ஆதரவளித்ததன் பின்னரே, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஒரு வேட்பாளரை அறிவித்தது.எனினும் இறுதியில் நாட்டு மக்கள் மத்தியில், சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்கத்துடன் இணைந்து சியம்பலாப்பிட்டியவை பிரதிச் சபாநாயகராக தெரிவு செய்துள் ளதாகவே செய்தி சென்றுள்ளதாக சுசில் பிரேம்ஜயந்த குறிப்பிட்டார். (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 05 - 10 - 1934



மறைவு 29 - 04 - 2022

### ஆறுமுகம் பத்மநாதன்

அளவெட்டி மத்தி தட்சிணற்றடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் பத்மநாதன் அவர்கள் கடந்த 29.04.2022 வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் (ஆசிரியர்) நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், புவனேஸ்வரி அவர்களின் ஆருயிர் கணவனும், Dr.ரஞ்சன் (அவுஸ்திரேலியா) காலஞ்சென்ற பகீரதன் மற்றும் ரஜனி (கனடா), ராகுலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கமலினி, சுகந்தினி, மனோகரன், கல்பனா ஆகியோரின் அன்பு மாமனாரும், மாதுரி, நிரத்திகா, பிரியா, அபிஷேக், கார்த்திக், சங்கர், நர்மதா, ஸ்னேகா, ஆகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான விஜயரத்தினம், பரமேஸ்வரி மற்றும் பாலசுப்பிரமணியம் (கொழும்பு) அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.05.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று நண்பகல் 11.30 மணியளவில் Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada என்ற இடத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**ராகுலன் - 002899835592**

தகவல் :
**Dr.ரஞ்சன்**
**ரஜனி - மனோகரன்**
**ராகுலன்**

## எரிபொருள் வழங்காமையால் குழப்பமுற்ற பொதுமக்கள் வீதியை மறித்துப் போராட்டம்

கொழும்பு, மே 07

கொழும்பு ஸ்டேடியம் டவர் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிலையத்தின் முன் மக்கள் குழப்பமடைந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதான வீதியை மறித்து வாகனங்களையும் வீதியில் நிறுத்தி வைத்து பொதுமக்கள் மற்றும் சாரதிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



அத்துடன் நாவல எரிபொருள் நிலையத்திலும் மொறட்டுவ பகுதி எரிபொருள் நிலையத்திலும் மக்கள் எரி பொருள் விநியோகிக்கப்படாமையால் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். (அ)

## சஷி வீரவன்ஸ வழக்கு விடயத்தில் விமல் வீரவன்ஸ அரசியல் பேரம்!

கொழும்பு, மே 07

சஷி வீரவன்ஸவின் வழக்கை ஒத்திவைத்ததன் மூலம் மேற்கொள்ளப்படும் அரசியல் பேரத்தின் காரணமாகவே புதிய சபாநாயகர் தெரிவின்போது விமல் வீரவன்ஸ வாக்களிக்க வரவில்லை என்று பாராளுமன்றில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சுமத்தியது.

பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி இந்தக் குற்றச்சாட்டை சுமத்தினார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவின் தாயார், வர்த்தகர் திருக்குமார் நடேசனை சந்தித்ததாக வெளியான தகவலை மறுத்தபோதே சமிந்த விஜயசிறி, விமல் வீரவன்ஸவின் மீது குற்றச்சாட்டை முன்வைத்தார்.

பாராளுமன்ற அமர்வுகளை நடத்துவதற்கு நாள் ஒன்றுக்கு 80 லட்சம் ரூபா செலவாகிறது. எனினும் இந்த 80 லட்சம் ரூபாவை கொண்டு எந்த பயனும் ஏற்படவில்லை என்று சமிந்த விஜயசிறி குறிப்பிட்டார்.

இதேவேளை நாட்டின் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றம் என்ற நிறுவனங்கள் பழைய கொள்கைகளை கொண்டு செல்கின்றன என்றும், எனவே இந்த இரண்டுக்கும் அப்பால் சென்று தீர்வுகளை காணவேண்டும் என்றும் காலிமுகத்திடம் போராட்டக்காரர்கள் கோருவதாக பாராளுமன்ற உறுப்பினர் சரித்த ஹேரத் நேற்று பாராளுமன்றில் குறிப்பிட்டார். (அ)

## பாராளுமன்றில்...

கணக்கிலெடுக்காமல் அடுத்த வாரமே நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுக்கு மாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேம தாஸ சபையில் கோரிக்கை விடுத்தார்.

மதியத்துக்கு பின்னர் சபை கூடிய போது, சபாநாயகருக்குப் பதிலாக ஹேசா விதானகே சபைக்கு தலைமை தாங்கினார். இதன்போது, நம்பிக்கையில்லா பிரேரணை திகதி தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியினர் கேள்வி எழுப்பினர்.

இதன்போது அவர்கள், சபாநாயகரை உடனடியாக சபைக்கு அழைக்குமாறும் இல்லையேல் அவரை வீட்டுக் காவலில் வைப்போம் என்றும் ஹரின் பெர்னாண்டோ எச்சரித்தனர்.

இதேசமயம், பாராளுமன்றத்துக்கு வெளியே போராட்டம் நடத்தியவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்புகை குண்டுகளை வீசியும், தண்ணீர் தாரைப் பிரயோகம் செய்தும் கலைத்தனர். இதற்கு ஐக்கிய மக்கள் சக்தியினர் எதிர்ப்பு தெரிவித்து சபையின் நடுவே வந்தனர்.

இவ்வாறு வந்து போராடியவர்கள் செங்கோலை கைப்பற்ற முயன்றனர். இதன்போது, படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ, பிரதிபடைக்கல சேவிதர் குஷான் ஜயரத்னஆகியோர் செங்கோலை பாதுகாக்க முயன்றனர்.

இதனால், இரு தரப்பினரும் இழுபறிப் பட்டதில் படைக்கல சேவிதர்கள் தரையில் விழுந்தனர். எனினும்,செங்கோலை அவர்கள் விடவில்லை.

இதன் பின்னர் சபாநாயகரின் அறைக்குள் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு நுழைந்தது. நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்துக்கு திகதி குறிக்க வலியுறுத்தினர். அத்துடன், மாணவர்கள் போராட்டம் மீதான தாக்குதல்களுக்கும் கண்டனம் தெரிவித்தனர். இதனால் சபாநாயகரின் அறைக்குள் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டது.

இதையடுத்து, சபைக்குள் பிரவேசித்த சபாநாயகர், பொலிஸாரின் கண்ணீர்ப் புகை பிரயோகம், தண்ணீர் தாரைப் பிரயோகம் பற்றியும் பொலிஸ்மா அதிபரிடம் அறிக்கை கோரப்படும் என்று குறிப்பிட்டார். அத்துடன், பாராளுமன்ற அமர்வை எதிர்வரும்17ஆம் திகதிக்கும் ஒத்திவைத்தார். (ஐ)

## மருந்துகளுக்கு...

மருத்துவமனையில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இது ஒரு மருத்துவ பேரிடரைக் கட்டியம் கூறியுள்ளது. சத்திர சிகிச்சைக்குத் தேவையான மருந்துகள் பல பற்றாக்குறையாகக் காணப்படுகின்றன. இதனால் அவசர சத்திரசிகிச்சை, கர்ப்பவதி தாய்மார்களுக்கான சத்திர சிகிச்சை தவிர்ந்த ஏனைய சத்திரசிகிச்சைகளை செய்யமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுமக்களை விழிப்படைய வைத்தல் அவசியம் தேவை. விபத்துக்கள், குழு மோதல்கள் கேளிக்கை நிகழ்வுகளைத் தவிர்த்து தற்போதைய சூழலை எதிர்கொள்ள அனைவரும் உதவுதல் வேண்டும்.

மேலும் மருத்துவமனை சமூகம் மருத்துவ சேவையைத் தொடர மனிதநேய மருத்துவ அவசர உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றது" - என்றுள்ளது. (ஐ-3)

## இடைக்கால...

தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன்.

ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டு அரசாங்கம் கலைக்கப்பட்டால், அடுத்து அமைக்கப்படும் அரசாங்கத்தில் அங்கம் வகிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாரா என அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்கு பதிலளித்த அவர்-

அதற்கான திட்டம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. அரசாங்கத்தில் இருந்து விலகியவர்கள் மீண்டும் அமைச்சரவைப் பதவிகளுக்கு - பிரதமர் பதவிக்குக் கூட வருவதற்கான திட்டங்கள் மட்டுமே உள்ளன என்று நாம் கேள்விப்படுகின்றோம். அப்படித்தான் நடக்கப் போகின்றது என்றால் அதில் பங்கேற்பது என்ற பேச்சுக்கே இடமில்லை-என்றார்.

எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தைக் கைப்பற்றினால் என்ன செய்வீர்கள்? என எழுப்பப்பட்ட கேள்விக்கு-

அது நடந்தால் நாம் பரிசீலிக்கவேண்டும். அதற்கு ஜனாதிபதி முதலில் பதவி விலகவேண்டும். ஜனாதிபதி பதவி விலகினால் இடைக்கால அரசில் பங்கேற்பது குறித்து நாங்கள் பரிசீலிப்போம்-என்று பதிலளித்தார் சுமந்திரன். (அ)

## அவசரகாலச்...

இது தொடர்பான இராஜிநாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அவர் அனுப்பி வைத்துள்ளாரெனப் பிரதி சபாநாயகரின் ஊடகச் செயலாளர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் பிரதி சபாநாயகர் பதவிக்காக போட்டியிட்ட அவர் 148 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

இதற்கு முன்னதாக, பிரதி சபாநாயகராக செயல்பட்ட கேகாலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய இரு வாரங்களுக்கு முன்னதாக பிரதி சபாநாயகர் பதவியிலிருந்து விலகுகிறார் அறிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், அவரின் இராஜிநாமா கடிதத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த 4 நாட்களுக்கு முன்னதாகவே ஏற்றுக்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரதி சபாநாயகர்...

ஜனாதிபதி, அரசாங்கத்துக்கு எதிராக நாடு முழுவதும் வேலைநிறுத்தப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில் அவசரகால சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாராளுமன்ற...

நடத்தியும் கலைத்தனர். இதனால், பாராளுமன்றின் பத்தரமுல்லை - தியத்த உயன வீதிப் பகுதியில் பதற்ற நிலை நீடித்தது.

மக்களின் பிரச்னைகள் பாராளுமன்றத்திற்குள் முறையாக பேசப்படவில்லை எனத் தெரிவித்து, பொலிஸ் பாதுகாப்பு அரண்களை தகர்த்துவிட்டு பாராளுமன்றத்திற்குள் நுழைவதற்கு போராட்டக்காரர்களான பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முயன்றனர்.

மாணவர்கள் பாராளுமன்றத்துக்குள் நுழைவதைத் தடுக்கும் வகையில் வீதித் தடைகள் அமைக்கப்பட்டிருந்தபோதும், மாணவர்கள் முதலாவதாக இடப்பட்டிருந்த வீதித் தடையை அகற்றி முன்நோக்கிச் சென்றனர்.

இதனையடுத்து, பொலிஸார் அவர்களைக் கலைக்க நடவடிக்கை எடுத்தனர். பொலிஸாரின் தாக்குதல்கள் தொடரவே, அவர்கள் வீசிய கண்ணீர்ப்புகை குண்டுகளை எடுத்த மாணவர்கள் மீண்டும் பொலிஸாரின் பக்கமே எறிந்தனர்.

இதையடுத்து, பொலிஸார் மாணவர்களை கலைக்க தண்ணீரைப் பீய்ச்சி அடித்து தாக்கினர். இந்தத் தாக்குதல்களைத் தொடர்ந்து மாணவர்கள் பாராளுமன்றுக்குள் நுழைவதைக் கைவிட்டு அந்தப் பகுதியிலேயே தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஜனாதிபதி செயலக முன்றலில் நடைபெறம் போராட்டத்துக்கு வலுச்சேர்க்கும் விதத்தில் தொடர்ந்து போராடவுள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் தெரிவித்தார். (ஐ)



# மன்னார் வைத்தியசாலை முன்பாக சுகாதாரத் துறையினர் போராட்டம்

மன்னார், மே. 07

சுகாதார தொழிற்சங்கங்களின் பணிப்புரைக்கு அமைவாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் மற்றும் சுகாதார துறையினர் இணைந்து நேற்று வெள்ளிக்கிழமை மதியம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு சேவைகள் மட்டுமே இடம் பெற்று வருகின்ற போதும்,அவசர சிகிச்சைக்காக நோயாளிகள் ஏனைய மாவட்ட வைத்தியசாலைகளுக்கு சிகிச்சைக்காக அனுப்பப்படுகின்றனர்.

மேலும் ஏனைய சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதோடு மாவட்ட வைத்தியசாலையில் மருந்து தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது.

தொடர்ந்து இந்த நிலை ஏற்பட்டால் பாரிய நிலை ஏற்படும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

எனவே அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள மருந்துப் பொருட்களுக்கு உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் எனவும், மக்கள் மேற்கொண்டு வரும் போராட்டங்களுக்கு தீர்வாக அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைக்கப்பட்டன.

### காலிமுகத்திடல் போராட்டம்

# பொலிஸாரின் கோரிக்கைமீது செவ்வாய்க்கிழமை விசாரணை

கொழும்பு, மே 07

கொழும்பு - காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலக முன்றலில் உள்ள தடையை அகற்றுமாறு பொலிஸார் முன்வைக்கவிருந்த கோரிக்கையை எதிர்வரும் 10ஆம் திகதி - செவ்வாய்க்கிழமை பிரதம நீதிவான் முன்னிலையில் முன்வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் ஷிலனி பெரேரா உத்தரவிட்டுள்ளார்.

காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக இடம்பெறும் ஆர்ப்பாட்டம் தொடர்பில் பொலிஸாரால் முன்வைக்கப்படவிருந்த கோரிக்கையை ஆராய்வதிலிருந்து கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனாவெல நேற்று விலகினார். இதையடுத்தே அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

பொதுமக்களின் தன்னெழுச்சிப் போராட்டம் தொடர்பில் ஏற்கனவே இரண்டு வழக்குகள் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான அரச சட்டத்தரணி சவேந்திர விக்கிரம தெரிவித்தார்.

இந்தக் கோரிக்கையை பரிசீலிக்க நீதிமன்றம் தயாரெனில், தாம் கோரிக்கையை முன்வைப்பதாக அரச சட்டத்தரணி சவேந்திர விக்ரம நேற்றுத் தெரிவித்தார்.

கோரிக்கையின் தன்மை தொடர்பில் திறந்த நீதிமன்றத்தில் எந்த விடயமும் முன்வைக்கப்படவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்கள் சார்பில் சட்டத்தரணிகள் குழுவுடன் ஆஜரான இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், அரச சட்டத்தரணி முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

இரு தரப்பினரும் முன்வைத்த சமர்ப்பணங்களைப் பரிசீலித்த மேலதிக நீதிவான் ஹர்ஷன கெகுனாவெல, இந்தக் கோரிக்கையைப் பரிசீலிப்பதில் இருந்து தான் விலகுகின்றார் எனவும், கோரிக்கை வேறு நீதிவானிடம் ஒப்படைக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ஐ)

## பல்கலை...

பட்டிருந்தது.

இதன் பின்னர் அங்கு கூடாரங்களை அமைத்து மாணவர்கள் தங்கியிருந்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று மீண்டும் மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன் மாணவர்கள் பொலிஸாரின் தடைகளை மீறி பாராளுமன்ற வளாகத்துக்குள் பிரவேசிக்க முற்பட்டபோது, அதனை தடுப்பதற்காக பொலிஸாரினால் அவர்கள் மீது கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தரைப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

அதேநேரம், பாராளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை பிற்போடப்பட்ட நிலையில், மாணவர்களும் தங்களது போராட்டத்தை எதிர்வரும் 17 ஆம் திகதி வரையில் தற்காலிமாக கைவிட தீர்மானித்தனர். (அ)

## நாடு நேற்று...

சங்கங்கள், வங்கிகள், போக்குவரத்து சேவை சங்கங்கள், பொது அமைப்புக்கள் என்பனவும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவைத் தெரிவித்திருந்தன.

இதனால் நேற்று நாடுமுழுவதும் பாடசாலைகள், அரச சேவைகள், வங்கிச் சேவைகள், பொதுச் சேவைகள், சுகாதார சேவைகள் என்பன முற்றாக முடங்கின. வணிக, பொதுச் சந்தை நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டிருந்தன. பொதுப் போக்குவரத்து சேவைகளும் பாதிக்கப்பட்டிருந்தமையால் நாட்டின் அனைத்து முக்கிய நகரங்களும் மக்கள் நடமாட்டமின்றி முடங்கிப் போய்க் காணப்பட்டன. எனினும், இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துகள் மட்டும் வழமைபோல் சேவையில் ஈடுபட்டன.

இதேசமயம், கடையடைப்பு போராட்டங்களுக்கு ஆதரவாக முக்கிய நகரங்கள் அனைத்திலும் ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இதேசமயம், வழக்கமான போராட்டங்களை விட நேற்றைய தினம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும் பூரண ஆதரவு வழங்கப்பட்டது. (ஐ)

(இது தொடர்பான மேலதிக செய்திகள் உள்பக்கங்களில் வெளியாகியுள்ளன)

ஈழநாடு
Eelanadu

# கிழக்கு மாகாணத்துக்கு 148 தாதியர்கள் நியமனம்!



திருமலை, மே. 07

மத்திய சுகாதார அமைச்சினால் புதிதாக நியமனம் வழங்கி வைக்கப்பட்ட தாதிய உத்தியோகத்தர்களில் 148 பேர் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு இணைப் புச் செய்யப்பட்டுள்ளதாக மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுகாதார அமைச்சினால் இணைப்பு செய்யப்பட்ட 148 தாதிய உத்தியோகத்தர்களில் 45 பேர் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கும், 43 பேர் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணி மனைக்கும், 37 பேர் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கும், 23 பேர் அம்பாறை பிராந் திய சுகாதார சேவைகள் பணிமனைக்கும் இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர். அவர்களுக்கான இணைப்புக் கடிதங்களை நேற்றுமுன்தினம் கிழக்கு மாகாண சுகா தார அமைச்சில் வழங்கப்பட்டன-என்றார்.

இந்நிகழ்வில் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலா ளர் திவாகார சர்மா, நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஸ்ரீவாணி, சிரேஷ்ட முகாமைத்துவ உத்தியோகத்தர் திருமதி எஸ்.விஜயகுமார் உள்ளிட்ட அமைச்சின் அதி காரிகள் கலந்து கொண்டு குறித்த இணைப்புக் கடிதங் களை வழங்கினர். (அ)

## கிண்ணியாவிலும் முடக்கம்



மட்டக்களப்பு, மே. 07

நாடு பூராகவும் இடம்பெற்றுவரும் அரசாங்கத்திற்கு எதிரான பூரண ஹர்த்தால் கிண்ணியாவிலும் மேற்கொள்ளப்பட்டது.ஹர்த்தால் காரணமாக நேற்று கிண்ணியாவிலும் கடைகள் மூடப்பட்டன.

குறிப்பாக அரசாங்க வங்கிகள், பிரதேச செயலகம், தபாலகம், விவசாய அபிவிருத்தி திணைக்களம், பாட சாலைகள் உள்ளிட்ட அரசாங்க திணைக்களங்கள் மூடப்பட்டதுடன் அரச சேவைகள் எதுவும் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 - 12 - 1938



மறைவு
28 - 04 - 2022

### இராஜரட்ணம் சந்திரபாலன்

யாழ். கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், கனடா Markham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராஜரட்ணம் சந்திரபாலன் அவர்கள் 28-04-2022 வியாழக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜரட்ணம் - தவமணி தம்பதிகளின் அன்பு புதல்வனும், காலஞ் சென்ற இரட்ணசிங்கம், சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும்,வசந்தாதேவி அவர்களின் அன்புக் கணவரும்,சுஜீவன், துசான், திவிஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பேரின்பநாயகம், கருணானந்தன், புவனமகாதேவி, தம்பி நாயகம், சூரியகலா, சந்திரகலா, அருந்தவநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சாந்தி, சாரதா, இராசன், ராணி, கலைமாமணி, குண பாலசிங்கம், அருட்செல்வி, வர்ணராஜன், இலங்கரட் ணம், சுபத்திரா, றாஜி ஆகியோரின் அன்பு மைத்துன ரும்,சேந்தி, நாதன் ஆகியோரின் சகலனும், சற்குணா னந்தம், காலஞ்சென்றவர்களான பத்மநாதன், தங்கரத் தினம், பிள்ளையாமணி மற்றும் தில்லையம்பலம், சரஸ்வதி, சிவமலர்(குஞ்சு) ஆகியோரின் பெறாமக னும், காலஞ்சென்றவர்களான குணநாயகம், இராசேந் திரம் மற்றும் பூபாலசிங்கம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

**பார்வைக்கு**
Saturday, 07 May 2022 6:00 PM - 9:00 PM
Sunday, 08 May 2022 10:00 AM - 11:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**கிரியை**
Sunday, 08 May 2022 11:00 AM - 12:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

**தகனம்**
Sunday, 08 May 2022 1:00 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

தொடர்புகளுக்கு:
**இன்பம் - சகோதரன்**
Mobile : +447799777770

தகவல்:
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

தோற்றம்
28 - 12 - 1948



மறைவு
02 - 05 - 2022

### சுப்பையா இசைக்கிமுத்து அன்ரனி

புத்தளத்தைப் பிறப்பிடமாகவும், புத்தளம், கொழும்பு இரத்மலானை, யாழ்.நாச்சிமார் கோவிலடி, அளவெட்டி ஆகிய இடங்களை வதிவிடமாகவும், பிரான்ஸ் Evry ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இசைக்கிமுத்து அன்ரனி அவர்கள் 02.05.2022 திங்கட்கிழமை அன்று புத்தளத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - சண் முகத்தம்மா (செல்லம்மா) தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா - நாகம்மா தம்பதி களின் அன்பு மருமகனும்,லீலாவதி இசைக்கிமுத்து அவர்களின் பாசமிகு கணவரும்,வதனன் அவர்களின் அன்புத் தந்தையும்,அனுஜனா அவர்களின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான ஆனந்தன், புஸ்ப ராசா, ஜெகன், சரோஜா மற்றும் ராஜா(கனடா), பன்னீர் (இத்தாலி), கஸ்தூரி, அம்பிகா(புத்தளம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,இராஜன்(ஜேர்மனி), தவராஜா (நாச்சிமார் கோவிலடி), கிருஷ்ணமூர்த்தி (திருகோண மலை), நவீந்திரராசா(நாச்சிமார் கோவிலடி), கணேச மூர்த்தி(பிரான்ஸ்), கருணாவதி சிவகுணராஜா (ஜேர் மனி), கருணாகரன்(பிரான்ஸ்), நந்தினி(இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும்,வயன், ஐயன்னா, அதியன் ஆகியோரின் அன்பு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (07.05.2022) சனிக்கிழமை மு. ப 07.00 மணிமுதல் மு.ப 10.00 மணிவரை Puttalam Mannar Road, saltren 02 எனும் முகவரியில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின் றோம்.

தொடர்புகளுக்கு:
**வதனன் - மகன்**
Mobile : +33661598652
**லீலாவதி - மனைவி**
Mobile : +33669282987
**நவம் - மைத்துனர்**
Mobile : +94758546059

தகவல்:
**குடும்பத்தினர்**

## வாழைச்சேனைப் பகுதி நேற்று வெறிச்சோடியது

மட்டக்களப்பு, மே 07

நாடளாவிய ரீதியில் நேற்று வெள்ளிக்கிழமை அரசாங்கத்துக்கு எதிராக ஹர்த்தால் மேற்கொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் வாழைச்சேனை பகுதி மக்களும்தமது ஆதரவை வழங்கினர்.

வாழைச்சேனை பிரதேசத்தில் பாடசாலைகள் வெறிச்சோடி காணப்பட்டதுடன், தமிழ் மற்றும் முஸ் லிம் வர்த்தகர்களின் வர்த்தக நிலையங்களும் பூட்டப் பட்டன. வங்கிகள் சில மூடப்பட்டதுடன், சில வங்கி கள் பகுதியளவில் திறந்து காணப்பட்டன.

அத்துடன் இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ் மாத்திரம் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளதுடன், தனியார் போக்குவரத்துக்கள் இடம்பெறவில்லை. வீதிகளில் மக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப் பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பு காரண மாக மக்களின் பொருட்கள் கொள்வனவு குறைந்து காணப்படும் நிலையில் இதனால் வியாபார நடவடிக் கையும் முற்றாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் வாழைச் சேனை வர்த்தக சங்கத்தினர் அரசாங்கத்துக்கு எதிரான ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கிக் கடைகளை மூடியுள் ளதாக தெரிவித்தனர். (அ)

## திருகோணமலையிலும் ஹர்த்தாலுக்கு ஆதரவு

திருமலை, மே 07

மக்களின் கோரிக்கைக்கு மதிப்பளித்து அரசாங்கம் பதவி விலகவேண்டும் எனும் கோரிக் கையை முன் வைத்து இன்றைய தினம் தொழிற்சங்கங்கள் ஒன்றி ணைந்து தொழிற்சங்க நடவ டிக்கையில் ஈடுபட்ட நிலையில் நேற்றைய ஹர்த்தாலால் திருகோணமலை நகரமும் ஸ்தம்பித்து போனது.

சில அரச திணைக்களங்கள் இயங்காததை அவதா னிக்க முடிந்தது. பாடசாலைகளும் மூடப்பட்டன. மத்திய மீன் சந்தை, மரக்கறி சந்தை ஆகி யவை மூடப் பட்டதுடன் போக்குவரத்து நடவடிக் கைகளும் ஸ்தம்பித்தன.

நகர் பகுதியில் உள்ள கடை கள், வணிக நிறுவனங் கள் என் பன மூடப்பட்டதுடன் ஹர்தாலுக்கு பூரண ஆதரவை திருகோணமலை மக்கள் வழங்கியதை அவதானிக்க முடிந்தது. (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 07.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.